வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959    Reg. No. : P. 1632    விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com    மலர் : 05    04.04.2024 வியாழக்கிழமை    இதழ் : 95    பக்கங்கள் : 12




# முருகன், ஜெயக்குமார், பயஸ் நேற்று நாடு திரும்பினார்கள்!

## மூன்றரை மணி நேரம் தடுத்து வைத்து விசாரணை





கொழும்பு, ஏப். 04

**இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று விடுதலையான முருகன் றொபேர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் நேற்று புதன்கிழமை இலங்கையை வந்தடைந்தனர்.**

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் ஊடாக நாடு திரும்பிய இவர்கள் அங்கு, தடுத்து வைக்கப்பட்டு சுமார் மூன்றரை மணி நேரம் கடுமையான விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற 7 பேர் 33 வருடங்களின் பின்னர் கடந்த 2022 நவம்பர் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்களில் மூவர் இந்தியாவை சேர்ந்தவர்கள் என்பதால், அவர்கள் அவர்களின் உறவினர்களுடன் இணைக்கப்பட்டனர்.

ஏனைய நால்வர்கள் இலங்கையை சேர்ந்தவர்கள். அவர்கள் இலங்கை செல்வதற்கு ஆவணங்கள் இல்லை என்று கூறி திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

சுமார் ஒன்றை வருடகாலமாக சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த நால்வரில் சாந்தன்

11

# நீதிமன்றில் இன்று வாக்குமூலம் அளிப்பதற்கு மைத்திரி மறுப்பு!

## - நீதிமன்றமும் ஏற்றது -

கொழும்பு, ஏப். 04

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளிக்கப்போவதில்லை என்று மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால தெரியப்படுத்தியுள்ளார்.

நேற்று புதன்கிழமை தனது சட்டத்தரணி சந்தீப்த சூரியாரச்சி ஊடாக நகர்த்தல் பத்திரமொன்றை தாக்கல் செய்த மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில், தமது தரப்பு சேவை பெறுநர் சம்பவம் தொடர்பில் விரிவான

11

# இன்று யாழ். வருகிறார் அநுரகுமார திஸநாயக்க

யாழ்ப்பாணம், ஏப். 04

ஜே. வி. பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

ஜனாதிபதித் தேர்தல் பரப்புரை முன்னாயத்தமாகவே அவர் யாழ்ப்பாணம் வருகிறார். இதன்போது அவர், ஆசிரியர்களின் அபிமானமிகு வட மாகாண மாநாடு மற்றும் யாழ்ப்பாண மாவட்ட வங்கி மற்றும் நிதி அமைப்பின் மாநாடு ஆகிய இரு நிகழ்வுகளில் பங்கேற்பார்.

ஆசிரியர்களின் அபிமானமிகு வட மாகாண மாநாடு பிற்பகல் விடுதி ஒன்றின் மண்டபத்தில்

11

# பல்கலைகளின் மாணவர் போராட்டங்கள் கலைப்பு!

கொழும்பு, ஏப். 04

பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் நேற்று முன்னெடுத்த போராட்டங்களை கலைப்பதற்கு பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டு, நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டனர்.

ஹோமாகம ஆதார மருத்துவமனையை தனியார் பல்கலைக்கழகத்தின் பயிற்சிகளுக்காக பயன்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தை கண்டித்து மேற்கொள்ளப்பட்ட மாணவர்

11

# பொலிஸ் காவலில் 24 பேர் மரணம்!

கொழும்பு, ஏப். 04

பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த போது 24 பேர் கடந்த வருடம் உயிரிழந்தனர் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமல்

11

# விவசாய நவீனமயமாக்கல் சபையை நிறுவத் திட்டம்!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 04

விவசாயத் துறையுடன் தொடர்புடைய அமைச்சுக்கள், நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளை மறுசீரமைப்பு செய்தல், கண்காணிப்பதற்காக ஜனாதிபதி - பிரதமர் தலைமையில் விவசாய நவீன மயமாக்கல் சபையை நிறுவ உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டத்தில் அரசாங்க நிறுவனங்களின் செயல்திறனை

11

# வாக்குகள் பிளவுறாது

## வஜிரவுக்கு விக்கி பதில்

கொழும்பு, ஏப். 04

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டால் வஜிர அபேவர்த்தன கூறுவது போல் தமிழர்களின் வாக்குகள் பிளவுபடாது. மாறாக இதுவரை

11

# எதிர்க்கட்சி தலைவர், ஐ. தே. கவினருடன் "மக்கள் மனு" குழுவினர் சந்தித்து பேச்சு





கொழும்பு, ஏப். 04

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார ஆகியோரை "மக்கள் மனு" வடக்கு கிழக்கு சிவில் சமூகக் குழு நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

தமிழ் மக்கள் அவர்களது தாயகத்தில் கௌரவத்துடனும் நல்லிணக்கத்துடனும் வாழும் வகையிலான அரசியல் தீர்வு உறுதிப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திவரும் "மக்கள் மனு" வடக்கு கிழக்கு சிவில்

11

# கச்சதீவை இலங்கைக்கு வழங்கிய ஒப்பந்தத்தை புறக்கணிக்க முடியாது

## - யாழ். இந்திய முன்னாள் துணைத் தூதுவர் -

## * கச்சதீவு கட்டுமானம் குறித்து இந்தியா அச்சம்

சென்னை, ஏப். 04

கச்சதீவு 50 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டது. அப்போது செய்த ஒப்பந்தத்தை இந்திய அரசு புறக்கணிக்க முடியாது என்று யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதராகத்தின் முன்னாள் தூதுவர் ஏ. நடராஜன் தெரிவித்துள்ளார்.

50 ஆண்டுகளுக்கு ஓர் அரசாங்கம் செய்ததை நாங்கள் பேசுகிறோம். இதன் அர்த்தம் அடுத்தடுத்த அரசாங்கம் அதை மீட்டுக்க வேண்டும் என்பதல்ல. இது ஓர் ஒப்பந்தம். ஒப்பந்தங்களை நாம் மதிக்க வேண்டும். அவற்றைப் புறக்கணிக்க முடியாது. நாட்டை வெவ்வேறு அரசியல் கட்சிகள் ஆளலாம். ஓர் அரசாங்கத்தால் செய்த ஒப்பந்தங்களைப் புறக்கணிக்க முடியாது.

இலங்கை அரசாங்கம் நமது (இந்திய) மீனவர்களை கடற்பரப்பில் மீன்பிடிக்க

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

சிறீமாவோ பண்டாரநாயக்கா ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபதாம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பின்னர் பாராளுமன்றத்தை, அரசியலமைப்பு சபையாக மாற்றி புதிய அரசியலமைப்பு சட்டத்தைத் தயாரித்தார். அப்போது அவரது அரசாங்கத்தில் இடம்பெற்றிருந்த இடதுசாரி கட்சியான லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரான கொல்வின் ஆர் டி சில்வா தயாரித்த அந்தப் புதிய குடியாரசு அரசியலமைப்பு சட்டம் எழுபத்தி இரண்டாம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது.

தமிழ் மக்கள் அதனை நிராகரிக்கின்றனர் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டும் வகையில் அப்போது தமிழ் அரசுக் கட்சியின் காங்கேசன்துறை எம். பியாக இருந்த தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்தார். தந்தை செல்வா பதவியை இராஜிநாமா செய்து இடைத்தேர்தல் ஒன்றின் மூலம் அதனை நிரூபிக்க விரும்பினார். அதாவது தமிழ் மக்கள் அந்த அரசியலமைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை இடைத்தேர்தலில் தனது கோரிக்கையாக முன்வைத்து அதில் வெற்றிபெறுவதன் மூலம் அந்த அரசியலமைப்பை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை ஜனநாயக வழியில் நிரூபிக்க தந்தை செல்வா விரும்பினார்.

ஆனால், நீண்ட இழுத்தடிப்புக்கு பின்னர் அதாவது சுமார் இரண்டரை ஆண்டுகள் இழுத்தடிப்புக்கு பின்னரே காங்கேசன்துறையில் இடைத்தேர்தலை நடத்த சிறீமாவோ அரசு முன்வந்தது.

1970 தேர்தலில் தமிழ் அரசு கட்சி சார்பில் வெற்றி பெற்றிருந்தபோதிலும் அதற்குப் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியிருந்த நிலையில், எழுபத்தி ஐந்தாம் ஆண்டு காங்கேசன்துறையில் நடந்த இடைத்தேர்தலில் தந்தை செல்வா கூட்டணி வேட்பாளராக போட்டியிட்டார். அவரை எதிர்த்து பிரபல இடதுசாரித் தலைவரான வி. பொன்னம்பலம் போட்டியிட்டார். அந்த இடைத்தேர்தலில் மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் தந்தை செல்வா வெற்றிபெற்று சிறீமாவோ அரசு கொண்டு வந்த அரசியலமைப்பு சட்டத்தை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை ஒரு ஜனநாயக வழியில் உலகுக்கு வெளிப்படுத்தினார்.

இப்போது நடக்கவிருக்கும், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை போட்டியிடச் செய்யவேண்டும் என்ற குரல் பரவலாக ஒலிக்கத் தொடங்கியிருக்கின்றது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட எதிர்பார்த்திருக்கும் வேட்பாளர்கள் அனைவருமே இந்த பதின்மூன்று பற்றியே பேசுகின்றனர். அதிலும் ரணில் விக்கிரமசிங்கவோ பொலிஸ் அதிகாரம் இல்லாத பதின்மூன்று என்கிறார். ஆனால், எல்லோருமே அதற்கு மறைமுகமாக ஒரு நிபந்தனையையும் முன்வைக்கின்றனர். அதாவது, பதின்மூன்றை தமிழ் தரப்பு தமது தீர்வாக ஏற்றுக்கொண்டால் மாத்திரமே அதனை அமுல்படுத்துவது பற்றி யோசிக்கலாம் என்கின்றனர்.

அரசியலமைப்பு சட்டத்தில் தற்போது இருக்கின்ற அதிகாரங்களைக்கூட தமிழ் மக்கள் அனுபவிப்பதற்கு அனுமதிக்கத் தெற்கு தயாராக இல்லை என்பதே அதன்மூலம் நாம் அறிந்துகொள்ளக்கூடியது. ஆனாலும் "பட்டுவேட்டிக்கு ஆசைப்பட்டு இருக்கின்ற கோவணத்தையும் இழந்துவிடக்கூடாது" என்பதுபோல, பதின்மூன்றை முற்றாக இழந்துவிடக்கூடாது என்பதில் தமிழர் தரப்பில் கருத்து வேறுபாடு இருப்பதாகத் தெரிவில்லை. ஒற்றையாட்சிக்குள் எந்தத் தீர்வையும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்கின்ற முன்னணிகூட மாகாண சபைகளை இல்லாமல் செய்வதை ஆதரிக்குமா என்பது தெரியவில்லை.

அதுவல்ல, நாம் இன்று சொல்ல வருவது. இந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் எத்தகைய தீர்வு ஒன்றின்மூலம் தமது பிரச்னைகளுக்கு நிரந்தரத் தீர்வை அடையலாம் என்று நினைக்கின்றார்கள் என்பது குறித்து தமிழ் மக்கள் ஒரு தெளிவான செய்தியை உலகுக்கு காட்டும்வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே பொது வேட்பாளர் ஒருவரைக் களத்தில் இறக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்றது. அதுவுமல்லாமல், தமிழர் ஒருவர் போட்டியிடுவது ஜனதிபதி தேர்தலில் வெற்றிபெற்று ஜனாதிபதி ஆவதற்காக அல்ல. தந்தை செல்வா தனது கடைசிக் காலத்தில், பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்து தமிழ் மக்களின் விருப்பம் ஒன்றை ஜனநாயக வழியில் சொன்னதுபோல,

தமிழ் மக்கள் தமது தீர்வாக எதனை வேண்டிநிற்கிறர்கள் என்பதை இந்த நாட்டுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் தெளிவாகச் சொல்வதற்கு இந்த சந்தர்ப்பத்தை தமிழர்கள் பயன்படுத்தவேண்டும். அவ்வாறு ஒரு தெளிவான செய்தியை சொல்வதற்கு இன்று இருக்கின்ற தலைவர்களில் பொருத்தமான தலைவர் சம்பந்தன் என்பதில் மாற்றுக்கருத்து யாருக்கும் இருக்காது.

தமிழ் மக்கள் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு விரும்பவில்லை என்று எந்த அடிப்படையில் சம்பந்தன் ஐயா சொன்னார் என்பது தெரியவில்லை. அவர் தமிழ் மக்களோடு ஊடாடி பல வருடங்களாகி விட்டன. அவர் தன்னோடு அவ்வப்போது பேசுகின்ற ஒருசிலரின் கருத்தைக் கேட்டு அதுவே தமிழ் மக்களின் கருத்து என்று முடிவெடுத்து விட்டாரோ தெரியவில்லை. மக்களின் விருப்பத்தை அறிந்து அதற்கு ஏற்ப செயல்படுவதுதான் ஒரு தலைவருக்கு அழகு அல்ல. தமிழ் மக்களுக்கு எது சரியானது என்பதை சொல்லி, அவர்களை வழிப்படுத்த வேண்டியதுதான் தலைவருக்கு அழகானது.!

- ஊர்க்குருவி.

# கடுகளவு மாற்றம் ஏற்பட்டாலும் நாடு மீண்டும் நெருக்கடிக்குள்!

## இப்படி எச்சரிக்கிறார் பந்துல

கொழும்பு, ஏப். 04

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் தற்போதைய வேலைத் திட்டத்தில் கடுகளவு மாற்றம் செய்யப்பட்டாலும் நாடு மீண்டும் பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்படும். அத்தோடு நாட்டின் எதிர்காலமும் கேள்விக்குறியாகிவிடும் - என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இதனை கூறினார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர்,

"கடந்த காலத்தில் வீழ்ச்சியடைந்த நாட்டை மீளக் கட்டியெழுப்பும் சவாலான பணியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டதன் பின்னர், சர்வதேச நாணய நிதியத்தின்



நீடிக்கப்பட்ட கடன் வசதியை பெறுவதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டது.

பின்னர் கடன் மறுசீரமைப்பு குறித்தும் ஆராயப்பட்டது. அதனால் தற்போது நாடு சுமூகமான பொருளாதார நிலையை அடைந்துள்ளது. இந்த நிலையை விருப்பமின்றியேனும் ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

அந்த நேரத்தில் டொலரின் பெறுமதி 400 ரூபாய்க்கு கிட்டியதாக காணப்பட்டது. ஆனால், இன்றளவில் டொலரின் பெறுமதி 300 ரூபாயை விடவும் குறைந்துள்ளது. அதனால், இறக்குமதிப் பொருட்களுக்கான கொடுப்பனவுகளும் குறைவடைந்திருக்கிறது.

பூச்சியமாகக் குறைந்து போயிருந்த நாட்டின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு கையிருப்பு இன்று 450 கோடி அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

நிலுவைத் தொகையின் நடப்புக் கணக்கில் உபரி ஏற்பட்டுள்ளது. அதன்படி, ரூபாயின் பெறுமதி அதிகரித்திருக்கிறது. பல பொருட்களின் விலை குறைந்துள்ளது. சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக அரச வரவு - செலவுத் திட்டத்தின் முதன்மைக் கணக்கில் உபரி ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் தற்போதைய வேலைத் திட்டத்தில் கடுகளவு மாற்றம் செய்யப்பட்டாலும் நாடு மீண்டும் பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்படும். அத்தோடு நாட்டின் எதிர்காலமும் கேள்விக்குறியாகிவிடும்." - என்றார். (ஐ)

# தென்னிந்திய திருச்சபையின் யாழ். பேராய ஆலயம் திறப்பு

யாழ்ப்பாணம், ஏப். 03

தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண பேராயத்துக்கான புதிய ஆலயம் இந்திய மற்றும் யாழ் ஆயர்களால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் திருச்சபை பொறுப்புக் குருவான அருட்பணி டிக்சன் உதயச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. ஆரம்ப நிகழ்வாக, விருந்தினர்கள் பாரம்பரிய முறைப்படி மங்கள வாத்திய இசையுடன் அழைத்து வரப்பட்டதுடன், மலர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர்.

தொடர்ந்து இந்தியாவிலிருந்து வருகை தந்த குழுவினர்களால் ஆலய பெயர்ப்பலகை மற்றும் நினைவுக்கல் திறந்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து, தென்னிந்திய திருச்சபையின் கோயம்பத்தூர் திருமண்டல பேராயர் ரவீந்தர் மற்றும் யாழ்ப்பாண திருமண்டல பேராயர் வி. பத்மதயாளன் ஆகிய இருவரும் இணைந்து ஆலயத்தை பிரதிஷ்டை செய்து திறந்து வைத்தனர்.



தொடர்ந்து மங்கள விளக்கேற்றப்பட்டதை தொடர்ந்து சிறப்பு பிரதிஷ்டை வழிபாடு இடம்பெற்றது.

இந் நிகழ்வில் ஏராளமானவர்கள் பங்கேற்றிருந்தனர். (ஐ)

# உறவினர்களுடன் இணைந்து கணவனை கொன்ற மனைவி

கொழும்பு, ஏப். 04

தனது உறவினர்களுடன் இணைந்து கணவனை தாக்கி கொலை செய்த மனைவியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாத்தறை, வெலிகம - கொஸ்காஹேன பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்த இந்த சம்பவத்தில் 44 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

மதுபோதையில் வந்து மனைவியை தாக்க முற்பட்டவேளை, அவரை கதிரையில் கட்டிவைத்த மனைவி தனது உறவினர்களுடன் இணைந்து அவரை தாக்கியுள்ளார்.

கதிரையில் அவரை கட்டிவைத்து தாக்கும்போது, கழுத்து பகுதியில் கயிறு இறுகி உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

வெலிகம பிரதேச மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டபோதிலும் உயிரிழந்தார் என்று தெரியவருகின்றது.

மனைவி கைது செய்யப்பட்டுள்ளார். தாக்கிய ஏனையோரை கைது செய்வதற்கான நடவடிக்கை இடம்பெற்றுவருகின்றது.

உயிரிழந்தவரின் இரு மகன்மாரும் வெளிநாட்டில் இருக்கின்றனர் எனவும், மகள் மட்டுமே அவர்களுடன் வசித்து வந்துள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
04.04.2024 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், பங்குனி 22

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசியலமைப்பு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்

“மார்ச் 12 இயக்கம” தென்பகுதியின் முன்னணி புத்திஜீவிகள் மற்றும் சிவில் சமூக செயல்பாட்டாளர்களை உள்ளடக்கியிருக்கும் ஓர் அமைப்பு. இந்த அமைப்பால் நடத்தப்பட்ட மகாநாட்டின்போது அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டம் உரிய முறையில் அமுல்படுத்தப்பட வேண்டும் என்னும் கருத்து முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இதேவேளை, காணாமலாக் கப்பட்ட மக்களுக்கு என்ன நடந்தது என்பது நேர்மையாக வெளிப்படுத்தப் பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

யுத்தம் முடிவுற்றதன் பின்னரான கடந்த பதினான்கு வருடங்களில் முன்னெடுக்கப்பட்ட நல்லிணக்க முயற்சிகள் முற்றிலும் தோல்வியடைந்தி ருக்கின்றன. இந்தக் காலத்தில் நம்பிக்கையுடன் நோக்கப்பட்ட சர்வதேச அழுத்தங்கள் எதிர்பார்த்த பெறுபேறுகள் எதனையும் வழங்கவில்லை. தமிழர் தரப்புகளால் முன்னெடுக்கப்பட்ட அழுத்தங்கள் சர்வதேச அளவில் எதிர்பார்த்த ஆதரவைப் பெறவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் அரசியலமைப்பில் இருப்பவற்றை உரியவாறு அமுல்படுத்த வேண் டும் என்னும் கோரிக்கை உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் முன்வைக்கப் பட்டு வருகின்றது. ஏனெனில், இலங்கைமீதான மேற்குலக அழுத்தங்கள் ஓர் எல்லைக்கு உட்பட்டவை. இதனை ஆரம்பத்தில் தமிழர் தரப்புகள் உரிய முறையில் நோக்கத் தவறிவிட்டன. தவறுகள் இடம்பெறுவதில் தவறில்லை. ஆனால், அதனைத் தொடர்ந்தும் கவனத்தில் கொள்ளாமல் இருந்தால் அது தவறானதாகும்.

இந்தியா தொடர்ந்தும் இலங்கை அரசாங்கத்திடமும் - இதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையிலும் ஒரு விடயத்தை வலியுறுத்தி வருகின்றது. அதாவது, இலங்கையில் தமிழ் மக்கள் கௌரவமாக வாழ்வதற்கு ஏற்றவாறான அரசியல் தீர்வுக்கு உரித்துடையவர்கள். அதேவேளை, அவ்வாறானதொரு தீர்வைக் காணும் நோக்கில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் அரசியலமைப்பில் உள்வாங்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத் தப்பட வேண்டும் - அதேவேளை, அவ்வாறு அமுல்படுத்துவது இலங் கைக்குத்தான் நல்லது என்றும் இந்தியா வலியுறுத்திவருகின்றது. இவ்வா றானதொரு பின்புலத்தில்தான் மேற்குலக அழுத்தங்களின் எல்லையை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தியாவின் கரிசனைக்கு மாறான வகையில் அரசியல் தீர்வு விடயத்தில் மேற்குலக அழுத்தங்கள் இருக்கப் போவதில்லை. இந்தியா, அமெரிக்காவுக்கு எதிரான நிலையிலிருந்த காலத்தில்தான் இந்திய - இலங்கை ஒப்பந்தம் நடைபெற்றது. அப்போது, அமெரிக்கா தங்களுக்கு சார்பாக இருக்குமென்றே அப்போதைய ஆட்சியாளர் ஜே. ஆர். ஜெயவர்த் தன எண்ணியிருந்தார். இந்த அடிப்படையில்தான் யானைக் குட்டி ஒன்றுடன் வாஷிங்டனுக்கு சென்றிருந்தார். ஆனால், அவரது எதிர்பார்ப்பு ஈடேறவில்லை - அதன் பின்னர்தான், இந்தியாவுடன் இணங்கிச் செல் லும் முடிவை எடுத்தார். பிராந்திய அரசியல் சூழலை புரிந்துகொள்வதற்கு இது ஒரு பால பாடமாகும்.

எனவே, தற்போதுள்ள சூழலில் இந்தியாவின் கரிசனைகளுக்கு மாறாக தலையீடு செய்ய வேண்டிய எந்தவொரு தேவையும் அமெரிக்காவுக்கு இல்லை - அது அமெரிக்காவால் முடியாததும்கூட. இந்தியாவின் கரிசனை களை புறந்தள்ளி ஈழத் தமிழர்களுக்காக செயல்பட வேண்டிய அவசிய மும் அவர்களுக்கு இல்லை. இதனைப் புரிந்துகொண்டால் தேவையற்ற உணர்ச்சிவசப்பட்ட வாதங்களைத் தவிர்த்து, நாம் அறிவுபூர்வமாக சிந் திக்க முடியும். ஆனால், அரசியலமைப்பில் உள்ளவற்றை அமுல்படுத்து வதற்குக்கூட அழுத்தங்கள் தேவைப்படுகின்றன என்பதுதான் கசப்பான யதார்த்தமாகும். அதனை உரிய முறையில் தமிழர் தரப்புகள் கையாளாது விட்டால் அரசியலமைப்பிலுள்ள விடயங்களை அமுல்படுத்த வேண்டும் என்பதுகூட ஓர் உதட்டளவு விவகாரமாகவே சுருங்கிப் போகலாம்.

எனவே, இந்த விடயத்தில் சாதகமான அபிப்பிராயங்கள் உள்ள அனைவருடனும் தமிழர் தரப்புகள் இணைந்து செயல்பட வேண்டும். நேச சக்திகளை திரட்டிக்கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் எதிர்த்துக் கொண்டிருப்பதன் ஊடாக முன்னோக்கிப் போக முடியாது.

# முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் கடமைகளை பொறுப்பேற்பு

முல்லைத்தீவு, ஏப். 04

முல்லைத்தீவு மாவட்ட புதிய பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்தி யர் முத்துக்குமாரசுவாமிசர்மா உமாசங்கர் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பா ளராக கடமையாற்றிவந்த குல லிங்கம் அகிலேந்திரன், வவுனியா ஓமந்தை பிரதேசத்தில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த நிலையில் குறித்த பதவி வெற்றிடமாக காணப் பட்டது.

இந்நிலையில் மருத்துவ நிர்வாக துறை யில் சிரேஸ்ர தரத்துக்கான பதவி உயர்வுகள் சுகாதார அமைச்சினால் அண்மையில் வழங் கப்பட்டதற்கு அமை வாக வைத்தியர் முத் துக்குமார சுவாமிசர்மா உமாசங்கர், குறித்த



முல்லைத்தீவு பிராந்திய சுகா தார சேவைகள் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு புதிய முல்லைத் தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் முத்துக்குமார சுவாமி உமாசங்கர் கடமைக ளையை பொறுப் பேற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஈச்சலம்பற்றில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபரொருவர் கொலை!

திருமலை, ஏப். 04

ஈச்சலம்பற்று பொலிஸ் பிரவுக்குட்பட்ட இறங்குது றைப் பகுதியில் நேற்று அதி காலை நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்யப்பட்டுள் ளார்.

இறங்குதுறை பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நப ரொருவரே இவ்வாறு கொலை செய் யப்பட்டுள்ளார்.

இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட தக ராறு காரணமாக, ஒரு குழு வினரால் குறித்த, கூரிய ஆயு தத்தால் தாக்கப்பட்டுள்ள தாக குறிப்பிடப்படுகின்றது.

தாக்குதலில் படுகாயம டைந்த நபர் ஈச்சலம்பற்று வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டதன் பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரி ழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொலையுடன் தொடர் புடையர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், ஈச்சலம்பற்று பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# சிறுகதை தொகுதி வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 04

ஈழத்தின் மூத்த முற்போக்கு எழுத்தாளர் மு. அநாதரட்சக னின் சிறுகதைத் தொகுதி யான “பின்தொடரும் வலி“ நூல் வெளியீடு நாளை மறுதினம் சனிக்கிழமை பி. ப. 3.30 மணிக்கு அல்வாய் மெதடிஸ்த தேவாலயத் தின் ஆழ்வாப்பிள்ளை மண் டபத்தில் இடம் பெறவுள்ளது.

ஜீவநதி ஆசிரியர் க.பரணீதரன் தலைமை யில் நடைபெற வுள்ள இந்நிகழ்வில் நூல் அறிமுக உரையை எழுத்தாளர் கலாநிதி சு. குணேஸ்வரன், வெளியீட்டுரையை கோப் பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரை யாளர் புலோலியூர் வேல் நந்த குமார், கருத்துரைக ளை யாழ்ப் பாணப் பல்கலைக்கழக விரிவு ரையாளர்களான இ. இராஜேஸ் கண்ணன் த. அஜந்தகுமார் ஆற் றவுள்ளனர்.

இந்த நூலின் முதன்மைப் பிரதிகளை ஓய்வுநிலை பிறப்பு - இறப்பு பதிவாளர் கி. பவா னந்தன், திருமதி பத்மபிரபா புதுமையி லோலன், பொறியி யலாளர் கா. காண்டீபன், முகில் யாட் உரிமையாளர் சீ.சிவசேகரன் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

(ஐ)

# குருபூசையும் சொற்பொழிவும்

யாழ்ப்பாணம், ஏப். 04


சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்து வம் பற்றிய விழிப்பு ணர்வை ஏற்படுத்தும் முகமாக சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த பெரியபுராணச் சிறப்பு சொற் பொழி வுத் தொடர் 52 (சடைய முனைய நாயனார்) நடைபெற வுள்ளது.

தெல்லிப்பழை - பன்னாலை சிவபூதரா யர் ஆலயத்தின் பிர தான மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு இந்த சொற்பொழிவு நடைபெறும்.

சேக்கிழார் பெருமானின் குருபூசையைத் தொடர்ந்து சொற்பொழிவை பிரசங்க வாரிதி ச. நவநீதன் “சுந்தர மூர்த்திநாய னாரை தனது புத்திரனாகப் பெற்ற நாயனார்” என்ற தலைப் பில் ஆற்றுவார்.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**ஏப்ரல் - 04 வியாழக்கிழமை**
**சோபகிருது வருடம் - பங்குனி 22**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 10.30 - 11.30 |
| ராகு காலம் | : | 01.30 - 03.00 |
| திதி | : | ஏகாதசி |




**மேடம்**
சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன் வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்**
கணவன் – மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நன்மை நடக்கும்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சவாலான காரியங்களையும் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. வேலைச்சுமை மிகுந்த நாள்.

**கடகம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் தைரியமான முடிவுகள் எடுப்பீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**சிம்மம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி காரியம் சாதிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சக ஊழியர்கள் உங்களுக்கு உதவுவார்கள். அமோகமான நாள்.

**கன்னி**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். கனவு நனவாகும் நாள்.

**துலாம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் லாபம் கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். எதிர்பாராத உதவி கிட்டும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். மேலதிகாரிகள் உங்களுக்கு ஒத்துழைப்பார்கள். துணிச்சலுடன் செயல்பட வேண்டும்.

**தனுசு**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி வியப்பார். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பாமல் நீங்களே முடிப்பது நல்லது. உத்தியோகத்தில் அதிகாரிகள் குறைக் கூறுவார்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும்.

**கும்பம்**
கணவன் - மனைவிக்குள் மனஸ்தாபம் நீங்கும். பழைய கடனை தீர்க்க முயற்சி செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மீனம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

# இலங்கையை கண்டிக்கவும் சீனாவை எதிர்க்கவும் மோடிக்கு துணிச்சல் இல்லை!

## முதலமைச்சர் ஸ்டாலின்

வேலூர், ஏப். 04

“இலங்கையைக் கண்டிக்கவும் துணிச்சல் இல்லை, சீனாவை எதிர்க்கவும் துணிச்சல் இல்லை. இந்த லட்சணத்தில் நீங்கள் கச்சதீவைப் பற்றிப் பேசலாமா?” என்று தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

வேலூரில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசிய அவர்,

இந்திய அரசு கச்சதீவை இலங்கைக்குக் கொடுத்ததைப் பற்றி இப்போது பா. ஜ. க. பேச ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால், இது அவர்களுக்கு எதிராகவே திரும்பிவிட்டது. தேன்கூட்டில் கையை வைத்தது போல, இப்போது பா. ஜ. க. மாட்டிக் கொண்டு தவிக்கிறார்கள்.

2014இல் ஆட்சிக்கு வந்த பா. ஜ. க. உச்சநீதிமன்றத்தில் என்ன கூறியது? “கச்சதீவு மீண்டும் வேண்டும் என்றால் இலங்கை அரசுடன் போரில் தான் ஈடுபட வேண்டும்” என்று உச்ச நீதிமன்றத்தில் கூறியது. இந்தப் பத்தாண்டு காலத்தில் பிரதமர் மோடி, எத்தனை முறை இலங்கைக்குப் பயணம் செய்தார். அப்போதெல்லாம் ஒருமுறையாவது கச்சதீவை மீண்டும் கேட்டிருக்கிறாரா?

இலங்கை ஜனாதிபதியை சந்தித்தபோதெல்லாம் கச்சதீவு இந்தியாவுக்குதான் சொந்தம் என்று சொல்லியிருக்கிறாரா? அப்போதெல்லாம் கச்சதீவு மோடியின் ஞாபகத்துக்கு வரவில்லை. நேரு காலத்தில் நடந்தது - இந்திரா காலத்தில் நடந்தது எல்லாம் ஞாபகம் இருக்கும் மோடிக்கு, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு நிகழ்ச்சி ஞாபகம் இருக்கிறதா?

நான்காவது, கச்சதீவுக்காக இப்போது திடீர் கண்ணீர் வடிக்கும் பிரதமர் மோடி, கடந்த பத்தாண்டுகளில் வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு மீனவர்கள் கைது, துப்பாக்கிச்சூடு என்று நடந்ததே? ஒரு கண்டிப்பாவது இலங்கைக்குச் செய்தாரா? ஏன் செய்யவில்லை? இப்போது, சீனா பற்றியாவது வாய்திறந்தாரா? அருணாசலப் பிரதேசத்தின் பல பகுதிகளுக்குச் சீனா சொந்தம் கொண்டாடுகிறதே? 30இற்கும் மேற்பட்ட நம்முடைய இடங்களுக்குச் சீனமொழியில் பெயர்களை வெளியிட்டிருக்கிறதே? அதற்கு என்ன சொல்லப் போகிறீர்கள்? இலங்கையைக் கண்டிக்கவும் துணிச்சல் இல்லை, சீனாவை எதிர்க்கவும் துணிச்சல் இல்லை. இந்த லட்சணத்தில் நீங்கள் கச்சதீவைப் பற்றிப் பேசலாமா? - என்றார். (ஐ)

# தமிழ்நாட்டின் நிலைமை கண்ணீரை வரவழைக்கிறது

## நிர்மலா சீதாராமன்

சென்னை, ஏப். 04

போதைப்பொருள் விவகாரத்தில் தமிழகத்தின் நிலையைப் பார்த்தால் கண்ணீர் வருகிறது என மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் வேதனை தெரிவித்தார்.

தமிழ்நாடு பல்லாவரத்தில் நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஒரு நாட்டின் பாதுகாப்பு, இறையாண்மை சம்பந்தப்பட்ட விஷயத்தை தேர்தலுக்காகத் தான் பேசவேண்டும் என்பதில்லை. அதுகுறித்து எப்போது வேண்டுமானாலும் பேசலாம். அது நமது உரிமை. கச்சதீவு தொடர்பாக 50 ஆண்டுகளாக உண்மைக்குப் புறம்பான பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது.

கச்சதீவு நமது மீனவர்கள் வாழ்க்கையின் ஓர் அங்கம். மேலும், நமது பொருளாதார மண்டலத்திலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. அப்படி இருக்கும்போது கச்சதீவைப் பற்றி பேசக்கூடாது என்று எப்படி சொல்ல முடியும்?

அப்போதும், இப்போதும் தி. மு. க. - காங்கிரஸ் கூட்டணியாக உள்ளனர். காங்கிரஸ் ஒரு தேசிய கட்சியாக இருந்து கொண்டு அதற்கு விளக்கம் கொடுக்காமல் பேசக்கூடாது என்று சொல்கிறது - என்று கூறினார். (ஐ)

# ஸ்டாலின் பொய்யைத் தவிர எதுவும் பேசுவதே இல்லை!

## பழனிசாமி சாடல்

தருமபுரி, ஏப். 04

முதல்வர் ஸ்டாலின் பொய்யைத் தவிர எதுவுமே பேசுவதில்லை. இவரது ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது என அ. தி. மு. க. பொதுச் செயலாளர் பழனிசாமி கூறியுள்ளார்.

தருமபுரியில் பிரசாரத்தில் ஈடுபட்ட அவர் பேசுகையில்,

முதல்வர் ஸ்டாலின் பொய்யைத் தவிர எதுவுமே பேசுவதில்லை. இவரது ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. கொலை, கொள்ளை, திருட்டு, வழிப்பறி, பாலியல் வன்கொடுமை, கஞ்சா விற்பனை அதிகளவில் நடக்கிறது. அதை தடுக்க திறமையில்லாத பொம்மை முதல்வராக ஆட்சி செய்து வருகிறார். முந்தைய அ. தி. மு. க. ஆட்சியில் மாணவர்கள் கைகளில் மடிக்கணினி விளையாடியது. ஆனால் இன்றைய ஆட்சியில் போதைப் பொருட்கள் விளையாடுகின்றன.

‘இந்தியாவைக் காக்க ஸ்டாலின் அழைக்கிறேன்’ என்ற திமுக-வின் தேர்தல் தொடர்பான விளம்பரத்தை பார்த்தால் என்ற பழமொழி தான் நினைவுக்கு வருகிறது - என்றார். (ஐ)

# தமிழகத்தின் உரிமைகளை பறிக்க பா. ஜ. கவுக்கு அ. தி. மு. க. துணை

## காங்கிரஸ் கட்சி

கரூர், ஏப். 04

தமிழக உரிமைகளை பறித்தது பாஜக, துணை போனது அ. தி. மு. க. என காங்கிரஸ் மாநிலத் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்தார்.

“மத்திய பா. ஜ. க. அரசு கடந்த 10 ஆண்டுகளில் மக்களுக்கு என்ன செய்தது. தமிழகத்துக்கு என்ன செய்தது. தி. மு. க. ஆட்சிக்கு வந்த ஓராண்டு கொரோனா மற்றும் பொருளாதார நெருக்கடி. இருந்தும் திமுக அரசு கொடுத்த 80 சதவீத வாக்குறுதிகளை நிறைவேற்றியது.

மோடி ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. மணிப்பூரில் பெண்கள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டனர்.

அரசமைப்புச் சட்டத்தை பாதுகாக்க தமிழகத்தின் உரிமைகளை மீட்க, நேர்மையான ஆட்சி அமைய காங்கிரஸை ஆதரியுங்கள் - என்றார். (ஐ)

# எந்த விவாதத்துக்கும் நான் எப்போதும் தயார்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



முல்லைத்தீவு, ஏப். 04

**இத்தருணத்தில் நாட்டின் பிரச்சினைகள் குறித்து விவாதம் தேவை என்று சமூகத்தில் பேசப்படுகிறது. இத்தகையதொரு விவாதம் நடக்க வேண்டும் என்பதை தான் ஏற்றுக்கொள்கிறேன். விவாதங்களை நடத்துவது ஜனநாயக சமூகத்தின் உயர் பண்பு என்பதால் எந்த விவாதத்திற்கும் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.**

எந்த விவாதத்துக்கும் தான் தயாராக இருப்பது போலவே நாட்டுக்கு சேவை செய்ய தன்னோடு போட்டிக்கு வருமாறு எந்தக் கட்சிக்கும் சவால் விடுப்பதாகவும், விவாதங்களை நடத்துவதற்கு போலவே நாட்டுக்கு அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும் தயார் என மகிழ்ச்சியோடு கூறிக்கொள்வதாக எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 140 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், முல்லைத்தீவு, முத்துஐயன் கட்டு, இடதுகரை அ.த.க பாடசாலைக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில், கல்லூரிக்குத் தேவையான புத்தகங்களைப் பெறுவதற்காக ஒரு இலட்சம் ரூபா நிதியையும் அவர் வழங்கினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று நமது நாட்டில் வறுமை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது. உலக வங்கியின் அறிக்கையின் பிரகாரம், இலங்கையில் வறியவர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. நாட்டின் பெரும்பாலான மக்கள் வறுமையில் வாடுகின்றனர். இதன் காரணமாக மக்களின் வாழ்க்கை மற்றும் சுகாதாரம் சீர்குலைந்து போசாக்கின்மை அதிகரித்து வருகிறது.

தேசிய அளவில் வறுமை ஒழிப்புத் திட்டமொன்று முன்னெடுக்கப்பட வேண்டும். தற்போதைய நிலையில் குறிப்பிட்ட காலத்திற்கு பணத் தொகை வழங்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இது தோல்வியுற்ற தற்காலிக தீர்வாகும். உற்பத்தி, முதலீடு, நுகர்வு மற்றும் சேமிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய வறுமை ஒழிப்புத் திட்டமொன்று தேவை என்றாலும், அரசாங்கம் விஞ்ஞானபூர்வமற்ற வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

அண்மைய நாட்களாக மதிய உணவு வழங்க ஆரம்பப் பிரிவு பிள்ளைகளை மட்டும் அரசாங்கம் தெரிவு செய்தது தவறு. அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட வேண்டும்-என்றார்.

(அ)

# ஜெரோம் பெர்னாண்டோ வெளிநாடு செல்ல அனுமதி!

கொழும்பு, ஏப். 04

போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு வெளிநாடு செல்வதற்கு அனுமதியளித்து கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் பிரசங்கம் செய்த குற்றச்சாட்டில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த போதகர் ஜெரோம் பெர்னாண்டோ தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் உள்ளிட்ட 3 நாடுகளில் நடைபெறவுள்ள மத சொற்பொழிவுகளில் பங்கேற்பதற்கு கோட்டை நீதவான் திலின கமகேவினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் முன்வைத்த கோரிக்கையை பரிசீலித்த நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இதன்படி, சந்தேகநபரான போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 26ஆம் திகதி வரை விதிக்கப்பட்டுள்ள பயணத்தடையை தற்காலிகமாக நீக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அதேநேரம், அவரது போதனைகள் அடங்கிய இறுவட்டுகள் அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்துக்கு அறிவித்தது.

இந்த நிலையில், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு நீதவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார்.

(அ)

# சுகாதார தொழிற்சங்கங்களின் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

கொழும்பு, ஏப். 04

72 தொழிற்சங்கங்களை உள்ளடக்கிய சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு, இன்று ஆரம்பிக்கவிருந்த பணிப் புறக்கணிப்பை தற்காலிகமாக கைவிட்டுள்ளது.

சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு நேற்று முன்தினம் இரவு நடத்திய கலந்துரையாடலில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட தரப்பினர் இந்த சந்திப்பில் பங்கேற்றிருந்தாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த தீர்மானம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த அந்த கூட்டமைப்பின் இணை இணைப்பாளர் சானக தர்மவிக்ரம, அரச தரப்பினருடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து பணிப்புறக்கணிப்பு நடவடிக்கை தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

(அ)

# மீன்பிடிக்கச் சென்றவரை வேட்டையாடியது முதலை!

கொழும்பு, ஏப். 04

கொஸ்லாந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹலந்த, அளுத்வெல பிரதேசத்தில் உள்ள நீர்த்தேக்கத்தில் மீன்பிடிக்கச் சென்ற நபர் ஒருவர் நேற்றுக் காலை முதலை இழுத்துச் செல்லப்பட்ட நிலையில் காணாமல் போயுள்ளார்.

அதிலிவெவ பிரதேசத்தில் வசிக்கும் மீனவர் ஒருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உமா ஓயா திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வரும் அளுத்வெல சிறு நீர்த்தேக்கத்தில் நேற்று அதிகாலை மீன்பிடிக்கச்சென்ற நபரை முதலை இழுத்துச் சென்றதாக அவருடன் மீன் பிடிக்கச் சென்ற சக நண்பரால் கொஸ்லாந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர், பொலிஸ் நிலைய அதிகாரிகள் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து காணாமல் போனவரை தேடும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாகவும், இது தொடர்பில் கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், சுழியோடிகளின் உதவியை பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# மாதாந்தம் 1.5 மில்லியன் டொலர் செலவில் 4 விமானங்கள் குத்தகைக்கு பெற அனுமதி

கொழும்பு, ஏப். 04

தொடர்ச்சியாக நட்டமடைந்து வருடம் சிறி லங்கன் விமான நிறுவனத்திற்கு மாதாந்தம் 1.5 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிட்டு நான்கு விமானங்களை குத்தகைக்கு பெற்றுக்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நான்கு விமானங்களை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஒரிக்ஸ் ஏவியேசன் நிறுவனத்திடமிருந்து மாதாந்தம் 3,60,000 அமெரிக்க டொலர் குத்தகைக்கு, 6 ஆண்டுகளுக்கு இரு விமானங்களை கொள்வனவு செய்ய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

இதற்கு மேலதிகமாக 3,65,000 அமெரிக்க டொலர் குத்தகைக்கு 8 ஆண்டுகளுக்கு ஏர்கோ கப்பிட்டல் லிமிட்டெட் நிறுவனத்திடமிருந்து இரு விமானங்களை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்படவுள்ளது.

2021 ஆம் ஆண்டு 45,231 மில்லியன் ரூபா நட்டத்தை அடைந்த சிறி லங்கன் விமான நிறுவனம், 2022 ஆம் ஆண்டில் 1,66,369 மில்லியன் ரூபா நட்டத்தை அடைந்தது.

2023 ஆம் ஆண்டிலும் 73,621 மில்லியன் ரூபா நட்டத்தை எதிர்நோக்கிய சிறிலங்கன் விமான நிறுவனத்தை மறுசீரமைப்பதற்காக தற்போது முதலீட்டாளர்களிடமிருந்து யோசனைகள் கோரப்பட்டுள்ளன.

தொடர்ச்சியான நட்டத்திற்கு மத்தியில் சிறி லங்கன் விமான நிறுவனத்தின் சில விமானங்களை பழுதுபார்க்கவும் முடியாமற்போயுள்ள நிலையில், மேலும் 4 விமானங்களை குத்தகைக்கு பெறுவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# கெஹலிய ரம்புக்வெல தாக்கல் செய்த பிணை மறுசீராய்வு மனு நிராகரிப்பு

கொழும்பு, ஏப். 04

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தாக்கல் செய்த பிணை மறுசீரமைப்பு மனுவை நேற்று புதன்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றம் நிராகரித்து உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தன்னை பிணையில் விடுவிக்க உத்தரவிடுமாறு கோரி கொழும்பு மேல் நீதிமன்றில் மறுசீராய்வு மனுவொன்றை சமர்ப்பித்திருந்தார்.

இதன்படி தரமற்ற தடுப்பூசிகளை கொள்வனவு செய்தமை தொடர்பிலான வழக்கு விசாரணை முடிவடையும் வரை கெஹலிய ரம்புக்வெலவை பிணையில் விடுவிக்க மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றம் மறுத்ததை அடுத்து அவர் இந்த பிணை விண்ணப்பத்தை சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல்களால் மறுசீரமைப்பு நடவடிக்கை தடைப்படலாம்!

## உலக வங்கி கரிசனை

கொழும்பு, ஏப். 04

**இவ்வருடம் இலங்கையில் தேர்தல்கள் நடைபெறவிருக்கும் நிலையில், அதன்விளைவாக தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தடைப்படக்கூடுமோ என்று தாம் கரிசனை கொண்டிருப்பதாக உலக வங்கியின் இலங்கைக்கான சிரேஷ்ட பொருளியலாளர் ரிச்சர்ட் வோல்கர் தெரிவித்துள்ளார்.**

உலக வங்கியின் 2024 ஆம் ஆண்டுக்கான தெற்காசியப் பிராந்திய அபிவிருத்தி நிலைவரம் மற்றும் இலங்கையின் அபிவிருத்தி நிலைவரம் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை நேற்று முன் தினம் செவ்வாய் கிழமை "வன் கோல்பேஸ் டவரில்" அமைந்துள்ள உலக வங்கியின் இலங்கைக்கிளை அலுவலகத்தில் வெளியிடப்பட்டது.

அதனை முன்னிட்டு இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் ஒருங்கிணைப்பில் உலக வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே ரிச்சர்ட் வோல்கர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார மீட்சியை இலக்காகக்கொண்டு முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் பாராட்டத்தக்கவை. எனினும், அவற்றின் விளைவாக மக்கள்மீது ஏற்பட்டிருக்கும் தாக்கங்கள் குறித்து மிகுந்த கரிசனையடைந்துள்ளோம். இருப்பினும் தற்போதைய சூழ்நிலையில் மறுசீரமைப்புக்கள் இன்றியமையாதவை.

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் கொள்கை மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு உலக வங்கி முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருகிறது. "அஸ்வெசும" செயல் திட்டம் மற்றும் நிதியியல் பாதுகாப்பு செயற்திட்டம் ஆகியவற்றுக்கு உலக வங்கி நிதியுதவி அளித்துள்ளது.

இவ்வருடம் இலங்கையில் முக்கிய தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில், அதன்விளைவாக பொருளாதார மீட்சியை முன்னிறுத்தி தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தடைப்படக்கூடுமோ என நாம் கரிசனை கொண்டுள்ளோம். பொருளாதார மீட்சிக்கும் நாட்டின் சுபீட்சத்துக்கும் மறுசீரமைப்புக்கள் இன்றியமையாதவை-என்றார்.

(அ)

# வவுனியாவில் தனியார் பஸ்ஸை வழி மறித்துத் தாக்குதல் முயற்சி!

வவுனியா, ஏப். 04

வவுனியா சூடுவெந்தபுலவு பகுதியில் நேற்று முன் தினம் மதியம் தனியார் பஸ்ஸை வழி மறித்து மற்றொரு தனியார் பஸ் சாரதி, நடத்துநர் குறித்த பஸ் நடத்துநர் மீது தாக்குதல் முயற்சி மேற்கொண்டதுடன் அச்சுறுத்தலும் விடுத்துள்ளனர்.

செட்டிக்குளம் வீரபுரம் ஊடாக வவுனியா நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸினை பாவற்குளத்திலிருந்து வவுனியா நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநர் வழி மறித்து செட்டிக்குளம் தனியார் பஸ்ஸின் நடத்துநர் மீது தாக்குதல் மேற்கொள்ள முயற்சி மேற்கொண்டனர். அத்துடன் அவருக்கு அச்சுறுத்தலும் விடுத்தனர்.

நேரசூசி பிரச்னை காரணமாகவே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# விருந்துபசாரத்தில் மோதல் ஒருவர் தாக்கப்பட்டு மரணம்!

கொழும்பு, ஏப். 04

புத்தளம், வணாத்தவில்லு, காட்டுப்புளியங்குளம் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் உயிரிழந்துள்ளதாக வணாத்தவில்லு பொலிஸார் தெரிவித்தனர்.

வணாத்தவில்லு பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற விருந்துபசாரத்தின் போதே இந்த மோதல் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த நபருக்கும் சந்தேக நபருக்குமிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக கடுமையாக தாக்கப்பட்ட இவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதே உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் தாக்குதலை மேற்கொண்டார் என சந்தேகிக்கப்படும் நபரை கைது செய்துள்ளதாக வணாத்தவில்லு பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# மின்சாரம் தாக்கி உயிரிழந்த யுவதியின் சடலம் சார்ஜாவிலிருந்து கொழும்புக்கு!

கொழும்பு, ஏப். 04

பல வருடங்களின் பின்னர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் பெய்த பெருமழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்த இலங்கைப் பெண் ஜயமினி சடமாலி விஜேசிங்கவின் சடலம் நேற்று அதிகாலை சார்ஜாவிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்டது.

களுத்துறை, மத்துகம பிரதேசத்தில் வசிக்கும் 26 வயதுடைய ஜயமினி சந்தமாலி விஜேசிங்க என்ற யுவதியே உயிரிழந்தார்.

இவர் மத்துகம சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கர மத்திய மகா வித்தியாலயத்தில் கணிதப் பிரிவில் உயர்தரம் கற்ற மாணவியாவார்.

அவர் சார்ஜாவில் தகவல் தொடர்பு நிறுவனத்தில் வரவேற்பாளராக 11 மாதங்கள் பணிபுரிந்தார்.

கடந்த மார்ச் மாதம் 09 ஆம் திகதி இரவு 09.30 மணியளவில் தான் தங்கியிருந்த விடுதியில் இருந்து எதிரே அமைந்துள்ள கடைக்கு செல்வதற்காக வந்துள்ளார்.

அந்த நேரத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் பெய்த தொடர் மழையால் ஷார்ஜாவும் வெள்ளப் பேரழிவைச் சந்தித்தது.

அந்த பகுதியில் மின் இணைப்பு பூமிக்கடியில் அமைக்கப்பட்டு, இந்த வெள்ள சூழ்நிலையால், இந்த மின் அமைப்பில் கசிவு ஏற்பட்டுள்ளது.

இதனை அறியாத ஜெயமினி சந்தமாலி விஜேசிங்கவும் இந்த வெள்ளத்தில் விழுந்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

அந்த நேரத்தில், இரண்டு எகிப்தியர்கள், ஒரு பங்களாதேஷ் மற்றும் ஒரு பிலிப்பைன்ஸ் பிரஜைகளும் இந்த இடத்தில் மின்சாரம் தாக்கி இறந்தனர்.

# மதுபான உரிமங்கள் வழங்க இடைக்காலத் தடையுத்தரவு!

கொழும்பு, ஏப். 04

மதுவரி சட்ட விதிகளுக்கு முரணான வகையில் மதுபான அனுமதிப்பத்திரம் வழங்குவதைத் தடுக்கும் வகையில் உயர் நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இலங்கை மதுபான அனுமதிப்பத்திரம் வைத்திருப்போர் சங்கம் உள்ளிட்ட பல தரப்பினரால் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று அடிப்படை உரிமை மனுக்கள் உயர்நீதிமன்றில் நேற்று முன் தினம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இதன்போது எதிர்வரும் மே மாதம் 10ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் வகையில் இந்த இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

யசந்த கோதாகொட, ஜனக் டி சில்வா மற்றும் அர்ஜூன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

தற்போது சட்டத்திற்கு முரணான வகையில் முறைசாரா வகையில் மதுபானச்சாலை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதாக மனுதாரர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன சமர்ப்பணங்களை முன்வைத்தார்.

சில அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது மதுவரி விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை தகுதிகளும் மீறப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்படி மதுவரி சட்டம் மற்றும் ஒழுங்குமுறை விதிகளை மீறி மதுபான அனுமதிப்பத்திரம் வழங்குவதை தடை செய்யும் உத்தரவை பிறப்பிக்குமாறு ஜனாதிபதி சட்டத்தரணி மற்றும் ஏனைய சட்டத்தரணிகள் நீதிமன்றில் கோரிக்கை விடுத்தனர்.

முன்வைக்கப்பட்ட அனைத்து சமர்ப்பணங்களையும் பரிசீலித்த மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் இந்த இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்துள்ளது.

(அ)

# சூரிய உதயத்தைக் காணச் சென்ற கனடா தம்பதியை தாக்கிய யானை

கொழும்பு,ஏப். 04

அதிகாலை சிகிரியாவில் சூரிய உதயத்தை பார்வையிடுவதற்காக சரணாலயத்தில் நடந்து சென்ற கனேடிய தம்பதியினர் யானை தாக்குதலுக்கு இலக்காகியதில் பெண் படுகாயமடைந்து தம்புள்ளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காட்டு யானை தாக்கிய போது, வெளிநாட்டவர்களின் அலறல் சத்தம் கேட்டு சுற்றுலா வழிகாட்டி ஒருவர் உடனடியாக அந்த இடத்திற்கு வந்துள்ளார், ஏற்கனவே காட்டு யானையால் வெளிநாட்டு பெண் தாக்கப்பட்டுள்ளார். பின்னர், மிகுந்த முயற்சியால் மீட்கப்பட்டார்.

சுற்றுலா வழிகாட்டி தம்பதியை உடனடியாக மோட்டார் சைக்கிளில் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றதாக சீகிரியா பொலிஸார் தெரிவித்தனர்.

சுற்றுலா பயணிகளின் உயிரை காப்பாற்ற முடிந்ததில் மிகுந்த மகிழ்ச்சி அடைவதாக சுற்றுலா வழிகாட்டி கண்ணீருடன் தெரிவித்தார்.

சீகிரிய பயணச்சீட்டு வழங்கும் நிலையத்திற்கு சுமார் 100 மீற்றர் தூரம் நடந்து சென்று கொண்டிருந்தபோதே குறித்த காட்டு யானைகளால் இவர்கள் இருவரும் தாக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த யானைகளின் தாக்குதலுக்கு இலக்கான கனேடிய பிரஜையான திருமதி லெக் னவ்ஸ்கா கத்தரினா (வயது-36) பலத்த காயமடைந்துள்ளார். யானை தாக்கியதில் அவரது கணவருக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புள்ளை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் வெளிநாட்டு பெண்ணின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலையின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

(அ)

# அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய 4 வாகனங்களுடன் சாரதிகள் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 04

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குள் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட மற்றும் உரிய அனுமதிப் பத்திரங்கள் இன்றி மணல் ஏற்றிச்சென்ற 4 வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டிருப்பதுடன் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மறவன்புலோ - கோவிலாக்கண்டிப் பகுதியில் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை வேளையில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த உழவியந்திரம் ஒன்றையும் அதன் சாரதியையும் சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

அத்துடன் கடந்த செவ்வாய்க் கிழமை உரிய அனுமதிப் பத்திரம் இன்றியும் அனுமதிப் பத்திரத்தில் மோசடி மேற்கொண்டும் மணல் கடத்தலில் ஈடுபட்ட மூன்று டிப்பர் வாகனங்கள் மற்றும் அதன் சாரதிகளையும் சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

(அ)

# இரு சந்தேக நபர்கள் தப்பியோட்டம்!

கொழும்பு, ஏப். 04

காலி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இரு சந்தேகநபர்கள் நேற்று அதிகாலை தப்பியோடியுள்ளனர்.

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு கடந்த முதலாம் திகதி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, பின்னர் மேலதிக விசாரணைகளுக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு சந்தேகநபர்களே இவ்வாறு தப்பியோடியுள்ளனர்.

26 மற்றும் 33 வயதுகளுடைய இரு சந்தேக நபர்களே இவ்வாறு தப்பியோடியுள்ளனர்.

(அ)

# ஈஸ்டர் தாக்குதலின் பின்னணி மைத்திரிக்கு முன்பே தெரியும்!

## அருட்தந்தை சிறில் காமினி கூறுகிறார்

கொழும்பு, ஏப். 04

**உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணி என்ன என்பது ஆரம்பத்திலிருந்தே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தெரியும் என கத்தோலிக்க திருச்சபை நம்புவதாக கொழும்பு பேராயர் இல்ல பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்துள்ளார்.**



இவ்விடயம் தொடர்பாக கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் நிவாரணம் கேட்கவில்லை.

அவர்களுக்கு ஒரு பையினை கொடுத்துவிட்டு மெழுகுவர்த்தி கொளுத்துவது அவமானம். மைத்திரிக்கு இதன் பின்னணி தெரியும்.

இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தீர்வு கிடைக்குமா? இல்லையா என்பது எங்களுக்குத் தெரியாது.

குண்டுவெடிப்பின் பின்னணியில் வேறு சிலரும் இருந்தார்கள் என்பதையே நாங்கள் மிக முக்கியமாக வலியுறுத்துகின்றோம்.

அதாவது இதன் பின்னால் சதி உள்ளதாக முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா கூறிய கதையும் வெளிவரும் என எதிர்பார்க்கின்றோம்.

மைத்திரி வழங்கிய அந்த அறிக்கை என்னவென்று யாருக்கும் சரியாகத் தெரியவில்லை.

அவ்வாறு மைத்திரி கூறியதாக இருந்தால் ஏன் கடந்த 5 வருடங்களாக அவர் அதனை வெளிப்படுத்தவில்லை.

அவருக்கு கடந்த மூன்று வாரங்களுக்கு முன்பே மைத்திரிக்கு இந்த தகவல் கிடைத்திருக்கவேண்டும் என நாம் நம்புகின்றோம்.

இதற்கு நீதி கிடைக்கவேண்டும் எனில் சுதந்திரமாக செயல்படக்கூடிய ஒரு விசாரணைக்கு அவசியம் தேவை என்பதே எமது நிலைப்பாடு-என்றார். (அ)

# கப்பலில் ஏற்றப்படும்வேளையில் சாரதியுடன் கடலில் வீழ்ந்த கார்!

## அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சம்பவம்

கொழும்பு, ஏப். 04

அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தில் தரித்து நிற்கும் கப்பல் ஒன்றில் வாகனங்களை ஏற்ற முயற்சித்தபோது கார் ஒன்று கடலில் வீழ்ந்ததில் சாரதி காயமடைந்து அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஏற்றுமதி செய்வதற்காக வைக்கப்பட்டிருந்த பல்வேறு வாகனங்களை நேற்று அதிகாலை 2.30 மணியளவில் சர்வதேச துறைமுகத்தில் கப்பலொன்றுக்கு ஏற்ற முயற்சித்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சாரதியின் நிலைமை பாரதூரமாக இல்லை என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

# 7 நாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு சலுகை நீடிப்பு

கொழும்பு, ஏப். 04

7 நாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கான விசா கட்டண விலக்கு மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 30ஆம் திகதி வரை இது அமுலிலிருக்கும் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தியா, ரஷ்யா, சீனா, இந்தோனேசியா, தாய்லாந்து, ஜப்பான் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளமையினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# ஜனாதிபதித் தேர்தலில் ரணில் நிச்சயம் போட்டி

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, ஏப். 04

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயமாக போட்டியிடுவார் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஹற்றனில் நடைபெற்ற ரமழான் நோன்பு துறக்கும் இப்தார் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் பன்முகத்தன்மையை பலமாக மாற்ற வேண்டும். பல்வேறு மதங்களையும் கலாச்சாரங்களையும் மதித்து வாழ வேண்டும் என்று நாங்கள் எப்போதும் கூறி வருகிறோம்.

செப்ரெம்பர் அல்லது ஒக்ரோபர் முதல் வாரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதுடன், ஜனாதிபதித் தேர்தலுக்கு அனைவரும் தயாராகி வருகின்றனர்.

பொருளாதார சிக்கலில் இருந்து இலங்கை மீண்டு வருகிறது. அதை புரிந்து கொண்டு பொருளாதாரத்தை கட்டியெழுப்பக்கூடிய தலைவர் ஒருவரே மீண்டும் ஜனாதிபதியாக வேண்டும்.

நாடு வீழ்ந்தால் நாட்டின் அனைத்து இனங்களும் வீழ்ச்சியடையும், நாட்டைக் கட்டியெழுப்ப அனைத்து இனங்களும் ஒன்றிணைய வேண்டும்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார். மேலும் பல வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள். நாடு வீழ்ச்சியடைந்த போது நாட்டை வழிநடத்தியது யார் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்சினையாகவே கச்சத்தீவு விவகாரம் தற்போது பேசப்பட்டு வருகிறது. அதனை இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டமை குறித்து ஒருபோதும் விவாதிக்கப்படவில்லை.

சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன் பேசி தீர்த்துவைக்கப்பட்ட விடயத்தை பற்றி தற்போது பேச தேவையில்லை-என்றார். (அ)

# சிங்கப்பூர் சரக்குக் கப்பல் தொடர்பில் முறையான விசாரணை நடத்தப்படும்

## இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர

கொழும்பு, ஏப். 04

அபாயகரமான பொருட்கள் அடங்கிய சிங்கப்பூர் சரக்கு கப்பல் நாட்டுக்குள் வருவதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனுமதி பெறவில்லை. இதுதொடர்பாக முறையான விசாரணை நடத்தி பாராளுமன்றத்துக்கு அறிவிப்போம் என சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை விசேட கூற்றொன்றை முன் வைத்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் ஷரித்த ஹேரத் ஆகியோர் இலங்கைக்கு வருகை தந்துகொண்டிருக்கும் போது விபத்துக்குள்ளாகியுள்ள சிங்கப்பூர் சரக்கு கப்பல் தொடர்பாக முன்வைத்த கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



இலங்கைக்கு வருகை தந்து கொண்டிருக்கும்போது விபத்துக்குள்ளாகியுள்ள சிங்கப்பூர் சரக்கு கப்பலில் பாரியளவிலான வெடிபொருட்கள் மற்றும் அபாயகரமான பொருட்கள் அடங்கிய கொள்கலன்கள் இருப்பதாக தெரிவிக்கப்படுவது உண்மை. இந்த விடயங்கள் தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை விசாரணை நடத்தி வருகிறது.

அதேபோன்று குறித்த கப்பல் இலங்கைக்குள் வருவதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடம் அனுமதி பெறவில்லை.

அதனால் இதுதொடர்பாக விசாரணை ஒன்றை ஆரம்பிக்குமாறு துறைமுகத்துக்கும் சுங்கத்துக்கும் அறிவித்திருக்கிறோம். இந்த கப்பல் அமெரிக்காவின் பால்டிமோர் பாலத்தில் விபத்துக்குள்ளானதால்தான் இந்த கப்பலில் இருந்த அபாயகர பொருட்கள் தொடர்பில் தெரிந்துகொள்ள முடியுமாகி இருந்தது.

அதனால் இதுதொடர்பக முறையாக விசாரணை நடத்தி, அது தொடர்பில் பாராளுமன்றத்துக்கு அறிவுறுத்த நடவடிக்கை எடுப்பேன்-என்றார். (அ)

# சிறுமி மீது துஷ்பிரயோகம் கைதானவர் தப்பியோட்டம்

மன்னார், ஏப். 03

மன்னாரில் 9 வயதுச் சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்டவர் வவுனியா வைத்தியசாலையில் இருந்து தப்பி ஓடியுள்ளார்.

மன்னார், தலைமன்னார் பகுதியில் 9 வயதுச் சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பில் 55 வயதுடைய நபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

உடல் நலப் பாதிப்பு காரணமாக வவுனியா வைத்தியசாலையில் கடந்த வியாழக்கிழமை அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று புதன்கிழமை காலை குறித்த சந்தேக நபர் வைத்தியசாலையில் இருந்து தப்பியோடியுள்ளார். அவரை தேடும் பணியில் சிறைக்காவலர்களும், பொலிசாரும் ஈடுபட்டுள்ளனர். (அ)

# இலங்கையில் நச்சுப் போதைப்பொருட்களை பயன்படுத்தும் 5 லட்சத்துக்கும் மேற்பட்டோர்!

கொழும்பு, ஏப். 04

இலங்கையில் 5 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் நச்சுத்தன்மை வாய்ந்த போதைப் பொருட்களை பயன்படுத்துவதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் ஷக்ய நாணயக்கார இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் 5 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பல்வேறு வகையான போதைப் பொருட்களை பயன்படுத்துகின்றனர். இது தவிர, புதிய வகையான போதை மாத்திரைகளும் சமூகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 30 ஆயிரம் பேர் இவ்வாறான போதை மாத்திரைகளை பயன்படுத்துகின்றனர்.

இந்நிலையில், இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் 25 வகையான இரசாயனப் பொருட்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஏனென்றால் அவற்றினால் புதிய வகையான போதை மாத்திரைகளை தயாரிக்க முடியும். எனவே இந்த இரசாயனப் பொருட்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுவதற்கு தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதி அவசியம்-என்றார். (அ)

# நீங்கள் வாக்களித்த அந்த கருணா எங்கே?

## கல்முனையில் அரியநேந்திரன் கேள்வி

காரைதீவு, ஏப். 04

**"அம்பாறை மாவட்ட மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விட்ட தவறுக்காக கடந்த தேர்தலில் தண்டனை தந்தீர்கள். அதற்காக கருணாவுக்கு வாக்களித்தீர்கள். இன்று ஜனாதிபதியின் ஆலோசகர் என்றும் படையணி திரட்டுவதாகவும் கூறுகிறார். இப்பொழுது நீங்கள் போராடுகிறீர்கள். எங்கே அந்த கருணா?"**

**-இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் கல்முனை ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னிலையில் கருத்துரைக்கையில் தெரிவித்தார்.**

கல்முனையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 9 ஆவது நாளாக தமிழ் மக்களது போராட்டம் தொடர்கிறது.

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், ஞா. ஸ்ரீநேசன், பா.அரியநேந்திரன் ஆகிய ஆகியோர் சமூகமளித்திருந்தார்கள்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னிலையில் அரியநேந்திரன் மேலும் பேசுகையில்-

கடந்த முறை இங்கு நீங்கள் உண்ணாவிரத போராட்டத்தை மேற்கொண்ட பொழுது ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி அரசாங்கத்தின் பிரதமராக இருந்தார். அவர் பொது நிர்வாக அமைச்சின் செயலாளரின் ஒப்பத்தோடு இங்கு கணக்காளரை நியமிப்பதற்காக ஹெலிகொப்டரில் இங்கே அதனை அனுப்பி வைத்திருந்தார் . அது ஒரு திட்டமிட்ட நாடகம்.

அது அடுத்த நிமிஷம் காற்றோடு கலந்தது. அதே ரணில் விக்கிரமசிங்க இன்று ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட இருக்கின்றார் .

அன்று இப்படியான கணக்காளர் நியமன போலி கடிதத்தை சமர்ப்பித்த ரணில் விக்கிரமசிங்க அன்று ஏமாற்றியவாறு இம்முறை ஜனாதிபதியாக இருக்கின்ற பொழுதும் ஏமாற்றுவாரா என்பது தமிழ் மக்களுக்கு சந்தேகமாய் இருக்கின்றது.

நல்லாட்சியில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை நிரந்தரமாக்குவதற்கான வாக்குறுதியை அளித்திருந்தும் இன்னும் அது நிறைவேறவில்லை.



மாறாக இங்கு அதிகாரம் பிடுங்கப்படுகிறது. இதற்கு அடிப்படை பின்னணியிலே சில இஸ்லாமிய அரசியல்வாதிகள் இருக்கின்றார்கள் அதற்கு உயர் அதிகாரிகள் சிலரும் துணை போகிறார்கள்.

இன ரீதியாக தமிழர்கள் ஒடுக்கப்படுகின்றார்கள்.

நாம் தமிழ் தேசிய கூட்டமைப்பு இது தொடர்பாக வழக்கு தாக்கல் செய்து இருக்கிறோம். அந்த வழக்கு தாக்கல் தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற வேளையிலே இந்த அதிகாரங்களை பிடுங்குவதற்கு இந்த அரசாங்க அதிபர் அல்லது ஏனையோர் யார் என்பதை கேட்க விரும்புகின்றோம்.

இந்த நீதிமன்றத்தை அவர்கள் தான் அவமதிக்கிறார்கள்.

நாம் இந்த கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தில் தொடர்ச்சியாக பூரணமாக பயணிப்போம்.

பாராளுமன்றத்தில் உள்ள தமிழ் உறுப்பினர்கள் அனைவரையும் நாங்கள் நம்புவதில்லை. தமிழ் தேசியத்துடன் சேர்ந்த 13 பாராளுமன்ற உறுப்பினர்கள் எமக்காக என்றும் குரல் கொடுப்பார்கள். அண்மையில் இந்தியாவில் சிறையில் அடைக்கப்பட்டவர்களை விடுவிக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலினிடம் கையெழுத்திட்டு கையளித்து இருந்தார்கள். அதே தமிழ் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்கள் எங்களுக்கு உதவுவார்கள் என்பது நம்பிக்கையாக இருக்கின்றது.

ஆனால் டக்ளஸ், பிள்ளையான், வியாழேந்திரன் போன்றவர்கள் தமிழர்கள் இல்லை. அவர்கள் பெயருக்குத் தான் தமிழர்களாய் இருக்கிறார்கள் .

24 மணி நேரத்தில் இதனை தரமுயர்த்தி தருவோம் என்று அன்று இங்கு வந்த பிள்ளையான் கூறினார். முழு கிழக்கையும் முடக்குவோம் என்று வியாழேந்திரன் கூறினார். மூன்று நாளிலே இதனை ஏற்படுத்தி தருவோம் என்று கருணா கூறினார்.

இவர்கள் எல்லாம் இன்று எங்கே? என்று நான் கேட்கின்றேன்.

தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு நீங்கள் வாக்களித்தாலும் வாக்களிக்காவிட்டாலும் நாங்கள் தொடர்ந்து இதற்காக குரல் கொடுப்போம்- என்றார். (அ)



# சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தின் இப்தார்

அம்பாறை, ஏப். 04

சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தின் வருடாந்த இப்தார நிகழ்வு பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் யூ.எல். நஸார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹூதுல் நஜீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதோடு தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர், அல்ஹிலால் வித்தியாலயத்தின் அபிவிருத்திச்சங்க புதிய செயலாளர் எம்.சி. கமால் நிஷாத், சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜூம்ஆப் பெரிய பள்ளிவாசலின் செயலாளர் ஐ.எல்.எம். மன்சூர் சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் என்.எம். அப்துல் மலிக், முன்னாள் அதிபர் ஐ.எல்.ஏ.மஜீத், உட்பட முன்னாள் கல்விப் பணிப்பாளர்கள், கல்முனை வலயக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், இதர பாடசாலை அதிபர்கள், பாடசாலையின் ஆசிரிய ஆசிரியைகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (அ)

# கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டல்!



காரைதீவு, ஏப். 04

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் பெண்கள் பிரிவில் கனிஷ்ட மாணவத்தலைவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் புதிதாக தெரிவு செய்யப்பட்ட கனிஷ்ட மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ச.இ. றெஜினோல்ட் எவ்.எஸ்.ஸி. தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞான பீட சிரேஸ்ட விரிவுரையாளர் டாக்டர் ( திருமதி) எஸ்.சதாநாதன் கலந்து சிறப்பித்தார்.

ஏனைய அதிதிகளும் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர். (அ)

# பாவனைக்கு உதவாத மீன்கள் எலி எச்சம் இருந்த வெதுப்பகம்

## சாய்ந்தமருதில் திடீர் சோதனையில் சிக்கின

அம்பாறை, ஏப். 04

புனித நோன்பு காலங்களில் சுகாதாரமற்ற சிற்றுண்டிகள் பொதுமக்களுக்கு விற்கப்படுவதை தடுத்து உணவுப் பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொதுமக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸஹீலா இஸ்ஸதீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம். அர்ஷாத் காரியப்பர் தலைமையில் தொடர்ந்தும் திடீர் சோதனை நடவடிக்கை இடம்பெற்று வருகிறது.

தொடர்ந்தும் நான்காவது நாளாகவும் சாய்ந்தமருது பிரதேச உணவகங்கள், சந்தை, சில்லறை கடைகள், மொத்த விற்பனை நிலையங்கள், சிறிய சூப்பர் மார்க்கட்கள் போன்றவற்றில் சோதனை நடவடிக்கை இடம்பெற்றது.

இதன்போது பாவனைக்கு பொருத்தமற்ற பழுதடைந்த மீன்கள் எரிபொருள் ஊற்றி அழிக்கப்பட்டதுடன் உணவகங்கள், வெதுப்பகங்களில் மனித பாவனைக்கு பொருத்தமற்ற எலி எச்சங்கள் காணப்பட்ட உணவுப் பண்டங்கள் கைப்பற்றப்பட்டன.



சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம். ஜெரின் உட்பட காரியாலய உத்தியோகத்தர்கள் பலரும் இந்த திடீர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (அ)

ஈழநாடு



# தாய்வானில் நிலநடுக்கம்!

## இடிபாடுகளுக்குள் சிக்குண்ட பஸ்கள் பயணிகளுடனான தொடர்பு துண்டிப்பு

தைபே, ஏப். 04

**தாய்வானில் பதிவான நிலநடுக்கம் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 09 ஆகவும் காணாமற்போனோரின் எண்ணிக்கை 800 ஆக அதிகரித்துள்ளது.**

**அத்துடன் 900 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.**

**இதேவேளை, தேசிய பூங்காவிற்குள் 50 பயணிகளுடன் பயணித்த 04 மினி பேருந்துகள் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ள நிலையில் பயணிகளின் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

தாய்வானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஏழாக உயர்ந்துள்ளது என த ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும், 700ற்கும் அதிகமானோர் படுகாயமடைந்த நிலையில் மீட்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்வான் நாட்டில் நேற்று அதிகாலை 7.4 ரிச்டர் அளவு கோலில் நிலநடுக்கம் ஒன்று பதிவாகியுள்ளது.

தாய்வான் தலைநகர் தைபேயில் ஹூவாலியன் உள்ளிட்ட நகரங்களில் ஏற்பட்ட குறித்த நிலநடுக்கம் காரணமாக சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

பாரிய நிலநடுக்கம் காரணமாக பல கட்டடங்கள் இடிந்து



கடுமையான சேதமேற்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சேதத்திற்குள்ளான கட்டிடங்களில் வசித்த பொதுமக்களை தற்போது மீட்கும் பணிகள் தீவிரமாக்கப்பட்டுள்ளதுடன், பலர் கட்டடங்களின் ஜன்னல்களில் இருந்து பாய்ந்து தப்பிச் செல்லும் காட்சிகளையும் ரொய்ட்டர்ஸ் வெளியிட்டுள்ளது. (அ)

# கண்ணிவெடியில் 9 குழந்தைகள் பலி!

## ஆப்கனில் துயரச் சம்பவம்

காபூல், ஏப். 04

கிழக்கு ஆப்கானிஸ்தானில் புதைக்கப்பட்ட கண்ணிவெடியை எடுத்து விளையாடிய போது, அது வெடித்ததில் 9 குழந்தைகள் இறந்துள்ளன.

ஆப்கானிஸ்தானில் கடந்த 2021இல் தாலிபன்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது. அவர்களின் ஆட்சியில் பெண்களுக்கான சுதந்திரம் முழுவதுமாகப் பறிக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக கடும் கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டன.

இந்த நிலையில், கிழக்கு ஆப்கானிஸ்தானின் கஸ்னி மாகாணத்தில் உள்ள ஜெரோ மாவட்டத்தில் 5 முதல் 10 வயதுடைய 9 குழந்தைகள் இணைந்து விளையாடியபோது அவர்களின் கையில் கண்ணிவெடி ஒன்று கிடைத்துள்ளது. அதை எடுத்து விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது அந்த கண்ணிவெடி திடீரென வெடித்ததில் அங்கிருந்த 9 குழந்தைகளும் பலியாகினர். இந்தச் சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

இதுகுறித்து கஸ்னி மாகாணத்துக்கான தாலிபன்களின் தகவல் மற்றும் கலாசாரப் பிரிவு இயக்குநர் ஹமீதுல்லா நிஜார், "உயிரிழந்த குழந்தைகளில் 4 சிறுமிகளும் அடக்கம். இந்த கண்ணிவெடிகள் ரஷ்ய படையெடுப்பு காலத்தில் புதைக்கப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக ஆப்கானிஸ்தான் போரினால் பாதிக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக போர் நடைபெற்றுவந்த ஆப்கானிஸ்தானில் பழைய கண்ணிவெடிகள், வெடிகுண்டுகள் போன்றவற்றால் சிறுவாகள் அவ்வப்போது உயிரிழந்து வருகின்றனர். மேலும் உடலளவிலும் பாதிப்புகள் உருவாகின்றன. குடும்ப வருவாய்க்காக பழைய பொருள்களை சேகரிக்கும் குழந்தைகள், இதுபோன்ற விபத்துகளில் சிக்கி உயிரிழந்து விடுகின்றனர்" எனத் தெரிவித்துள்ளார். (அ)

*மனிதாபிமானப் பணியாளர் கொலை:*

# மன்னிப்பு கோருகிறார் இஸ்ரேலிய ஜனாதிபதி

ஜெருசலேம், ஏப். 04

காஸாவில் தொண்டு நிறுவன ஊழியர்கள் 7 பேர் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு இஸ்ரேலிய ஜனாதிபதி மன்னிப்பு கோரியுள்ளார். அதேவேளை, இத்தாக்குதல் ஒரு கடுமையான தவறு என இஸ்ரேலிய பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

காஸாவில் இஸ்ரேல் திங்கட்கிழமை நடத்திய தாக்குதலால் தனது ஊழியர்கள் 7 பேர் கொல்லப்பட்டனர் என அமெரிக்காவை தளமாகக் கொண்ட வேர்ல்ட் சென்ட்ரல் கிச்சன் எனும் தொண்டு நிறுவனம் தெரிவித்தது.

இதையடுத்து காஸாவில் தனது பணிகளை இடைநிறுத்துவதாகவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியா, போலந்து, பிரிட்டன் நாடுகளைச் சேர்ந்த வர்களுடன் அமெரிக்க கனேடிய இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்ட ஒருவர் மற்றும் பலஸ்தீனியர் ஒருவர் இச்சம்பவத்தில் உயிரிழந்தனர் என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், காஸாவில் தொண்டு நிறுவன ஊழியர்கள் 7 பேர் கொல்லப்பட்ட தாக்குதல் ஒரு கடுமையான தவறு என இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகளின் தலைவர் ஹேர்ஸி ஹலேவி தெரிவித்துள்ளார்.

"இச்சம்பவம் ஒரு கடுமையான தவறு. அது நடந்திருக்கக் கூடாது" என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, இத்தாக்குதல் தொடர்பான தனது ஆழ்ந்த கவலையை தெரிவிப்பதற்கும் மன்னிப்பு கோருவதற்காகவும் வேர்ல்ட் சென்ட்ரல் கிச்சன்



நிறுவனத்தின் தலைவர் ஜோஸ் அன்ரெஸூடன் தான் உரையாடியதாக இஸ்ரேலிய ஜனாதிபதி ஐசக் ஹேர்ஸோக் தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதல் வேண்டுமென்றே நடத்தப்பட்டதல்ல என இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாஹூ கூறியுள்ளார். எனினும் அவர் மன்னிப்பு கோரவில்லை. இது ஒரு துயர சம்பவம் எனக் கூறியுள்ள அவர், இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்படும் எனக் கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் இத்தாக்குதலைக் கண்டித்துள்ளார். பொதுமக்களுக்கு உதவும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தொண்டு நிவாரண ஊழியர்களை பாதுகாப்பதற்கான போதிய நடவடிக்கைகளை இஸ்ரேல் மேற்கொள்ளவில்லை எனவும் பைடன் கூறியுள்ளார்.

இச்சம்பவத்தை கண்டித்துள்ள ஐநா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டேரெஸ், இந்த யுத்தத்தில் மனிதாபிமானப் பணியாளர்கள் 196 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

உடனடி மனிதாபிமான போர் நிறுத்தத்தின் அவசியத்தை இச்சம்பவம் வெளிப்படுத்துகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

# காஸாவில் தங்கள் நடவடிக்கைகளை இடைநிறுத்திய தொண்டு அமைப்புகள்

## பெரும் மனிதாபிமான நெருக்கடியில் சிக்கும் அபாயம்

ஜெருசலேம், ஏப். 04

காசாவில் மனிதாபிமான பணியாளர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து தொண்டு நிறுவனங்கள் தங்கள் மனிதாபிமான பணிகளை இடைநிறுத்தியுள்ளதை தொடர்ந்து மனிதாபிமான நெருக்கடி தீவிரமடையும் ஆபத்து உருவாகியுள்ளது.

வேர்ல்ட் சென்ரல் கிச்சனின் வாகனத்தொடரணி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஏழு மனிதாபிமான பணியாளர்கள் கொல்லப்பட்டதை தொடர்ந்து காசாவில் மனிதாபிமான பணியில் ஈடுபட்டுள்ள பல அமைப்புகள் தங்கள் பணியாளர்களின் பாதுகாப்பை கருத்தில்கொண்டு தங்கள் பணிகளை இடைநிறுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளன.

இது முன்னர் ஒருபோதும் இடம்பெறாத விடயம் என தெரிவித்துள்ள அனெரா என்ற தொண்டு நிறுவனம் பல மனிதாபிமான பணியாளர்களும் அவர்களது குடும்பத்தினரும் கொல்லப்பட்ட நிலையில் மனிதாபிமான உதவிகளை வழங்குவது பாதுகாப்பான நடவடிக்கை இல்லை என்ற முடிவிற்கு வந்துள்ளோம் என தெரிவித்துள்ளது.

மனிதாபிமான உதவிகள் இடைநிறுத்தம் பாலஸ்தீன மக்களுக்கு ஏற்படுத்தக்கூடிய மோசமான பாதிப்புகளை நாங்கள் புரிந்துகொள்கின்றோம் எனினும் மனிதாபிமான உதவி விநியோகத்தின் போது அதிகரிக்கும் ஆபத்துகள் எங்கள் பணியாளர்கள் தாங்கள் மீண்டும் பாதுகாப்பாக பணியாற்ற முடியும் என கருதும்வரை எங்கள் பணிகளை இடைநிறுத்தவேண்டிய நிலையை உருவாக்கியுள்ளது என அனரா என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

காசாவில் பட்டினியும் வறுமையும் எந்த நேரத்திலும் உருவாகலாம் என கடந்த மாதம் ஐ.நா. தெரிவித்திருந்தது.

பாலஸ்தீன பகுதியில் பேரழிவை ஏற்படுத்தக்கூடிய பட்டினியை எதிர்கொள்பவர்களின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்துள்ளது என ஒக்ஸ்பாம் தெரிவித்துள்ளது.

பட்டினி நிலைமை காரணமாக 27 குழந்தைகள் சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர் என ஹமாசின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த சூழ்நிலையில் இஸ்ரேலிய குண்டுவீச்சு மற்றும் எல்லைகளில் விதிக்கப்பட்டுள்ள போக்குவரத்து தடைகளின் மத்தியில் அவசரமாக உணவு தேவைப்படு பவர்களிற்கான உணவை வழங்குவதற்காக சைப்பிரசிலிருந்து கடல்வழி மார்க்கமொன்றை உருவாக்கும் நடவடிக்கைகளில் வேர்ல்ட் சென்ரல் கிச்சன் ஈடுபட்டிருந்தது.

இந்த சூழ்நிலையிலேயே திங்கட்கிழமை அதன் வாகனத்தொடரணி மீது இஸ்ரேல் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

இந்த தாக்குதலில் பிரிட்டனை சேர்ந்த மூவர் கொல்லப்பட்டுள்ளனர் ஜோன் சப்மன் ஜேம்ஸ் ஹென்டர்சன் ஜோம்ஸ் கேர்பி மூவரும் தொண்டர் அமைப்பின் பாதுகாப்பு குழுவில் இணைந்து பணியாற்றிக் கொண்டிருந்தனர்.

இந்த குழுவின் தலைவரான அவுஸ்திரேலிய பெண் ஜோமி பிரான்கோம் கனடா போலந்து பிரஜைகளும் பாலஸ்தீன பிரஜையொருவரும் இந்த தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலிய பெண்மணி உலகின் பல நாடுகளில் பணியாற்றியவர்.

வேர்ல்ட் சென்ரல் கிச்சன் ஏற்பாடு செய்த மனிதாபிமான கப்பல்கள் அன்றைய தினம் 400 மெட்ரிக்தொன் உணவுப்பொருட்களுடன் வந்து சேர்ந்தன இதற்கான நிதியை ஐக்கிய அரபு இராச்சியம் வழங்கியிருந்தது.

எனினும் 100 தொன் உணவு இறக்கப்பட்ட நிலையிலேயே இஸ்ரேலின் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்த தாக்குதலை தொடர்ந்து கப்பலை மீண்டும் சைப்பிரசிற்கு திரும்புமாறு வேர்ல்ட் சென்ரல் கிச்சன் கேட்டுக் கொண்டுள்ளது.

இதேவேளை மனிதாபிமான வாகனத்தொடரணி மீது இஸ்ரேல் தாக்குதலை மேற்கொண்டமை குறித்த பல விபரங்களை இஸ்ரேலில் இருந்து வெளியாகும் ஹறெட்ஸ் வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள்காட்டி இந்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

வேர்ல்ட் சென்ரல் கிச்சன் அமைப்பின் இலச்சினையுடன் பயணித்துக்கொண்டிருந்த வாகனத்தொடரணி மீது இஸ்ரேலின் ஆளில்லா விமானங்கள் அடுத்தடுத்து ஏவுகணை தாக்குதலை மேற்கொண்டுள்ளன. (அ)

# 60 வீத வாக்காளர்கள் யாருக்கு வாக்களிப்பதென முடிவில்லை

## கூறுகிறார் அகிலவிராஜ் காரியவசம்



கொழும்பு, ஏப். 04

**இலங்கையில் 60 சதவீதத்துக்கும் அதிகமான வாக்காளர்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பது குறித்து இன்னும் தீர்மானிக்காத நிலையில் இருப்பதாக அரசாங்கத்தினால் நடத்தப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் உதவித் தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.**

சில அரசியல் கட்சிகள் அதிக வாக்குகளைப் பெறும் என வெளியாகும் தகவல்கள் பொய்யானவை. சில அரசியல் கட்சிகள் மாயையில் வாழ்கின்றன என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது நாட்டில் ஏற்பட்ட ஆச்சரியத்தை போன்றதொரு ஆச்சரியத்தை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்துவார். திரைக்கு பின்னால் பல விடயங்கள் நடக்கின்றன. எனவே வெளியில் இருந்து பார்த்து முடிவுக ளுக்கு வரவேண்டாம். பல தனிநபர்களும் கட்சிகளும் ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு தங்கள் ஆதரவை வழங்க உறுதியளித்துள்ளனர், மேலும் தேர்தல் நெருங்கும்போது அவர்கள் பகிரங்கமாக அறிவிப்பார்கள்-என்றார்.

# 500 ஆங்கில ஆசிரியர்களை சேவையில் இணைக்க முடிவு!

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

கொழும்பு, ஏப். 04

உயர் தொழில்நுட்ப கல்வி டிப்ளோமாவை பூர்த்தி செய்த 500 பேரை ஆங்கில ஆசிரியர்களாக சேவையில் இணைத்துக் கொள்ள கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இந்த ஆட்சேர்ப்பு முன்னெடுக்கப்படும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ள தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்கு அவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

(அ)





# கொழும்பில் திடீரென தீப்பற்றி எரிந்த பஸ்!

கொழும்பு, ஏப். 04

கொழும்பு, அளுத்மாவத்தை வீதியில் சுற்றுலா செல்லவிருந்த பஸ்ஸொன்று திடீரென தீ பற்றி எரிந்ததில் பஸ் முழுவதும் தீக்கிரையாகியுள்ள சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து கண்டி நோக்கி சுற்றுலா செல்லவிருந்த பஸ்ஸொன்றே இவ்வாறு தீ பற்றி எரிந்துள்ளது.

குறித்த பஸ்ஸின் சாராதியும் நடத்துநரும் தேநீர் அருந்துவதற்காக வெளியில் சென்ற சந்தர்ப்பத்தில் இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளதாக கூறப்படுகின்றது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# குடும்ப வன்முறைகளைத் தீர்க்க புதிய சட்டம் கொண்டு வரப்படும்

## இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க

கொழும்பு, ஏப். 04

தற்போதைய குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டத்தில் திருத்தம் செய்து புதிய சட்டமூலமொன்றை பாராளுமன்றத்திற்கு கொண்டு வருவதற்கான அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதென மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

அதேநேரம், வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பெண்களை வலுவூட்டுவதற்கான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்பித்த பின்னர் தேசிய மகளிர் ஆணைக்குழுவை ஸ்தாபிக்க வாய்ப்பு கிட்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பெண்களை வலுவூட்டுவதற்கான சட்டமூலத்திற்கு 04.03.2024 அமைச்சரவை அனுமதி கிடைத்திருந்ததோடு, 03.07.2024 வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. அதனை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருப்பதோடு, தேசிய மகளிர் ஆணைக்குழு அமைப்பதற்கான நியதிகளும் அதற்குள் உள்வாங்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியமும் 20.03.2024 பாராளுமன்றத்தில் பெண்களை வலுவூட்டுவதற்கான சட்டமூலம் தொடர்பான கலந்துரையாடலை நடத்தியிருந்தது. ஜனாதிபதி அலுவலகம், சட்டமா அதிபர் திணைக்களம், சட்ட வரைஞர் திணைக்களம் உள்ளிட்ட தரப்பினரும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்தனர்.

பெண்களை வலுவூட்டுவதற்கான சட்டமூலம் தொடர்பில் உலக வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்தப்பட்டதோடு, ஒரு வாரத்துக்குள் அந்த அவதானிப்புகளை பரிசீலிக்க மகளிர் பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர். அதில் திருத்தங்கள் இருக்கும் பட்சத்தில் மீண்டும் வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டதன் பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க பாராளுமன்ற பெண் உறுப்பினர்கள் ஒன்றியத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குடும்ப வன்முறையால் பாதிக்கப்படும் பெண்கள் சார்பில் அவருக்கு நெருக்கமான ஒருவர் வழக்கு பதிவு செய்வதற்கான வாய்ப்பு உள்ளிட்ட பல முக்கிய விடயங்களும் புதிய சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பதோடு, நடைமுறையிலிருக்கும் குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டத்தில் திருத்தம் செய்து புதிய சட்டமாக பாராளுமன்றத்தில் சமர்பிக்கவும் அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது-என்றார். (அ)

# இரத்தினபுரியில் விபத்து; 7 பேர் வைத்தியசாலையில்

கொழும்பு, ஏப். 04

இரத்தினபுரி - பத்துல்பான பிரதேசத்தில் லொறி ஒன்றும் வேன் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் 7 பேர் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் வானில் இரண்டு சிறு குழந்தைகளும் பயணித்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, பிரதேசவாசிகள் தலையிட்டு காயமடைந்தவர்களை இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் அனுமதித்ததுடன் லொறியின் சாரதி இரத்தினபுரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# வெங்காய இறக்குமதியாளர்களுக்கு எட்டு ஆயிரம் கோடி ரூபாய் இலாபம்

## சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு



கொழும்பு, ஏப். 04

சகல வரிகளும் நீங்கலாக 92 ரூபாய்க்கு பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்து அதனை 700 ரூபாய்க்கு விற்பனை செய்யும் செயற்பாட்டை வர்த்தகர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு மாத்திரம் பெரிய வெங்காய இறக்குமதியாளர்கள் 8 ஆயிரம் கோடி ரூபாய் இலாபமடைந்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேபோன்று உருளைக் கிழங்கு இறக்குமதியாளர்கள் 1,500 கோடி ரூபாயும், காய்ந்த மிளகாய் இறக்குமதியாளர்கள் 1,800 கோடி ரூபாயும் இலாபமாகப் பெற்றுள்ளனர் என்று அவர் மேலும் கூறினார்.

எனவே, அத்தியாவசிய உணவு பொருட்கள் இறக்குமதியாளர்கள் பெற்றுக்கொண்டுள்ள இலாபத்தில் 36 வீதத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

டொலரின் பெறுமதி குறைவடைந்துள்ள நிலையிலும் அத்தியாவசிய பொருட்களின் விலை குறைவடையவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், புத்தாண்டு காலத்தில் மக்களை சுரண்டிப் பிழைக்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதை வர்த்தகர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என வழிவகைகள் பற்றிய குழுவின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ)

## பல்கலைகளின்...

போராட்டங்களே இவ்வாறு கலைக்கப்பட்டன.

சிறீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த எதிர்ப்புப் பேரணி பல்கலைக்கழகத்துக்கு அருகிலிருந்து விஜயராம சந்தியை வந்தடைந்தது. எனினும், மாணவர்கள் ஹைலெவல் வீதிக்குள் பிரவேசிப்பதற்கு முன்னதாக பொலிஸார் வீதியை மறித்து நீர்த்தாரை, கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி பேரணியைக் கலைத்தனர்.

மொறட்டுவை பல்கலைக்கழக மாணவர்கள் மற்றுமோர் எதிர்ப்பு நடவடிக்கையை ஏற்பாடு செய்திருந்தனர். இந்த எதிர்ப்பு நடவடிக்கையை கலைப்பதற்கும் பொலிஸார் நீர்த்தாரை, கண்ணீர்ப் புகைக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டன.

இதேவேளை, விரைவுரையாளர்கள் பற்றாக்குறை உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து அநுராதபுரம் பல்கலைக்கழக கல்லூரி மாணவர்களும் எதிர்ப்புப் பேரணியை நேற்று நடத்தினர்.

அநுராதபுரம் நகர மத்தியில் இருந்து பல்கலைக்கழக கல்லூரிக்கு முன்பாக வந்த மாணவர்கள் வீதியை மறித்து போராடினர். (ஐ)

## முருகன்...

கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி நோயால் உயிரிழந்தார்.

எஞ்சிய மூவரையும் உயிருடன், உறவினர்களிடம் சேர்க்க வேண்டும் என இந்திய அரசுக்கு அழுத்தங்கள் ஏற்பட்டமையால் மூவரையும் இலங்கைக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்ட நிலையில் நேற்று இலங்கை வந்தனர்.

வெளிநாடுகளில் உள்ள தமது உறவினர்களிடம் செல்வதற்கு ஏதுவாக சகல நாட்டுக்கும் செல்லும் விதத்தில் கடவுசீட்டை வழங்குமாறு மூவரும் கோரிக்கை விடுத்திருந்த போதிலும், இலங்கை வருவதற்கு மட்டுமே அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு கடவுச்சீட்டு வழங்கப்பட்டது. (ஐ)

# ஐ. எம். எவ்வின் விருப்புக்கு ஏற்ப அரசமைப்பு இயற்றப்படவில்லை

கொழும்பு, ஏப். 04

சர்வதேச நாணய நிதியத்தின் விருப்பத்துக்கு அமைய நாட்டின் அரசமைப்பு இயற்றப்படவில்லை. ஆகவே அரசமைப்பின் பிரகாரம் எதிர்வரும் செப்ரெம்பர் அல்லது ஒக்ரோபர் மாதமளவில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் புதன்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

சர்வதேச நாணய நிதியத்துடனான செயல்திட்ட நடவடிக்கைகள் நிறைவுப் பெறும் வரை எந்த தேர்தலையும் நடத்த போவதில்லை என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடையாது.

சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் செயற்பாடுகள் எதிர்வரும் ஜூலை மாதம் நிறைவடைவதாக குறிப்பிடப்படுகிறது. பொதுத்தேர்தல் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

எதிர்வரும் செப்டெம்பர் அல்லது ஒக்டோபர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதற்கு முன்னர் எந்த தேர்தலும் நடத்தப்படாது என்ற நிலைப்பாட்டில் இருந்துக் கொண்டு தான் ஜனாதிபதி அவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் விருப்பத்துக்கு அமைய நாட்டின் அரசியலமைப்பு இயற்றப்படவில்லை - என்றும் தெரிவித்தார்.

## நீதிமன்றில்...

வாக்குமூலத்தை குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகி வழங்கியுள்ளதாகவும். இதன் காரணமாக நீதிமன்றத்தில் முன்னிலையாகி மீண்டும் வாக்குமூலம் வழங்க இயலாது என்றும் மைத்திரிபாலவின் சட்டத்தரணி நேற்று நீதிமன்றில் தெரிவித்தார்.

முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதவான், ஏற்கனவே அறிவிக்கப்பட்டமைக்கு அமைய நாளை (இன்றையதினம்) வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை (இன்று) நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டிய அவசியமில்லை எனவும் அறிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் மைத்திரிபால சிறிசேன, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு வழங்கிய வாக்குமூலத்துக்கு அமைவாக நீதிமன்றத்தில் நாளை வாக்குமூலம் வழங்குமாறு, மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டிருந்தது. (ஐ)

## எதிர்க்கட்சி...

சமூகக் குழு செவ்வாய்க்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்க பண்டாரவை ஐக்கிய தேசி யக் கட்சியின் தலைமை பணிமனையான சிறிகொத் தாவில் சந்தித்து, கலந்துரையாடியிருந்தது.

இந்த சந்திப்பில், மக் கள் மனு சிவில் சமூகக் குழுவின் உறுப்பினர்களான டான் தொலை காட்சி குழுமத் தலைவர் எஸ். எஸ். குகநாதன்,

அரசியல் ஆய்வாளர் ஆ. யதீந்திரா, மூத்த ஊடகவி யலாளர் சு. மகாலிங்கசிவம், சட்டத்தரணி பு. முகுந்தன், வினோத் தியாக ராஜா மற்றும், திருமதி சுவர்ணா நவரெட்ணம் ஆகியோர் பங்குகொண்டிருந்தனர்.

அன்றைய தினம் மாலை, எதிர்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவை, எதிர்கட்சித் தலைவர் பணிமனையில் சந்தித்து கலந்துரையாடியிருந்தோம். இந்த சந்திப்பின் போது, மக்கள் மனு சார்பில், ஆ. யதீந்திரா, மகாலிங்கசிவம், பு.முகுந்தன், வினோத் தியாகராஜா மற்றும், திருமதி சுவர்ணா நவரெட்ணம் ஆகியோர் பங்குகொண்டிருந்தனர்.

இதன்போது, பின்வரும் விடயங்களை "மக்கள் மனு" வடக்கு - கிழக்கு சிவில் சமூகக் குழு சுட்டிக்காட்டியிருந்தது.

யுத்தத்துக்குப் பின்னரான நல்லிணக்க முயற்சிகள் எதிர்பார்த்தவாறு முன்னோக்கி பயணிக்கவில்லை. தொடர்ந்தும் தமிழ் மக்கள் மத்தியில் அவநம்பிக்கையான சூழலே காணப்படுகின்றது. யுத்தத்துக்குப் பின்னரான கடந்த பதினான்கு வருடகால அரசியலில், 2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் மட்டுமே ஓரளவு நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது. எனினும், அத்தகைய சூழலில் கூட, தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் ஈடேறவில்லை. இதுவரையான அனுபவங்களை தொகுத்து நோக்கும் போது, புதிய அரசியல் யாப்பின் மூலம் பிரச்னைகளை தீர்ப்பதற்கான அரசியல் சூழல் இருப்பதாக நாம் கருதவில்லை.

இந்தப் பின்புலத்தில் நல்லிணக்கத்தில் முன்னோக்கி பயணிக்க வேண்டுமாயின், அரசியல் அமைப்பின், 13ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் உறுதிப்படுத்தப்பட்டவைகள் அனைத்தையும் முழுமையாக அமுல்படுத்துவதன் மூலமே, பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் ஓரளவாவது நம்பிக்கையை ஏற்படுத்த முடியுமென்று நாம் நம்புகின்றோம். முன்னர் இழைக்கப்பட்ட தவறுகள் மீளவும் இடம்பெறாத வகையில், விடயங்கள் தூரநோக்குடன் கையாளப்பட வேண்டும். இந்த விடயங்கள் அனைத்தும், வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளிப்படையாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

மேலும், ஒரு பொறுப்புவாய்ந்த சிவில் சமூகம் என்னும் வகையில், இந்த நாட்டை அனைவருமாக ஒன்றிணைந்து முன்னோக்கி கொண்டு செல்வது பற்றி மட்டுமே நாம் சிந்திக்கின்றோம். இலங்கையின், ஒரு பகுதி மக்களான தமிழ் மக்களை அதிருப்தியில் வைத்துக் கொண்டு, நாட்டை நாம் பொருளாதார ரீதியில் முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது என்பதையும் நாம் மேற்படி சந்திப்புகளின்போது சுட்டிக்காட்டியிருந்தோம்.

மேற்படி இரண்டு சந்திப்புக்களின் போதும் சாதகமான பதில்களே கிடைக்கப்பெற்றன. மக்கள் மனு சிவில் சமூகக் குழுவின் எதிர்பார்ப்புகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாக ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்திருந்தார்.

தன்னிடம் இனவாத நிகழ்ச்சி நிரல் இல்லை, அரசியலமைப்பில் உள்ளவற்றை அமுல்படுத்துவதில் தன்னிடம் முரண்பாடான அபிப்பிராயங்கள் இல்லை - தனது, 2019 தேர்தல் விஞ்ஞாபனத்திலும் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் விடயம் தொடர்பில் குறிப்பிட்டிருந்தேன், எனவே என்னை நீங்கள் நம்பலாம் - என்று குறிப்பிட்ட, எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சட்டங்களை அமுல்படுத்தினாலும்கூட, மக்கள் மத்தியில் நிலவும் பரஸ்பர சந்தேகங்களை போக்கும் வகையில் நாம் அதிகம் செயல்பட வேண்டியிருக்கின்றது. பரஸ்பர சந்தேகங்களின் காரணமாகவே அரசியலமைப்பிலுள்ள விடயங்களை அமுல்படுத்துவதில் கூட, நாம் தடைகளை எதிர்கொண்டோம், எனினும், எங்களுடைய ஆட்சி அமையுமானால், நாட்டில் பெரும் மாற்றங்களை நீங்கள் காண்பீர்களென்றும் குறிப்பிட்டிருந்தார்.

திர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடனான சந்திப்பின்போது, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசனும் பங்குகொண்டிருந்தார். மக்கள் மனு வடக்கு கிழக்கு சிவில் சமூகக் குழு, கடந்த மாதம் மனோ கணேசனை சந்தித்து கலந்துரையாடியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## விவசாய...

மேம்படுத்தும் நோக்கிலேயே இந்த சபை நிறுவப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

நேற்று ஜனாதிபதி பணிமனையில் விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத் திட்டம் தொடர்பிலான மீளாய்வுக் கூட்டத்திலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். (ஐ)

## வாக்குகள்...

காலமும் பெரும்பான்மையின வேட்பாளர்களுக்கு வாக்களித்த அனைத்துத் தமிழர்களும் ஒன்றிணைந்து தமிழ் பொதுவேட்பாளருக்கு வாக்களிப்பர் என்றும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழர்களாகிய நாம் இதுவரையில் பெரும்பான்மையின சமூகத்தைச் சேர்ந்த வேட்பாளருக்கே வாக்களித்திருக்கின்றோம். அவர்கள் அனைவரும் எமது அரசியல் பிரச்னைக்குத் தீர்வை வழங்குவதாக வாக்குறுதியளித்தனர்.

ஆனால், தேர்தல் முடிவடைந்ததன் பின்னர் அவர்களுக்கு எம்மைத் தெரியவே இல்லை. அவர்கள் வெகு இலகுவாக எம்மைப் புறக்கணித்துவிட்டனர். நாங்கள் 1956 ஆம் ஆண்டு எங்கே இருந்தோமோ, இப்போதும் அங்கேயே இருக்கின்றோம். வடக்கு, கிழக்கு தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கு இன்னமும் தீர்வு வழங்கப்படவில்லை.

வட, கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்களின் சார்பில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் களமிறங்கினால் அவர் ஜனாதிபதியாகத் தெரிவாகமாட்டார் என்பது உண்மையே. தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவது தமிழர்களின் வாக்குகளைப் பிளவுபடுத்தும் என்ற தர்க்கம் முன்வைக்கப்படுகின்றது.

ஆனால் மிகப்பொருத்தமான தமிழ் வேட்பாளர் களமிறக்கப்பட்டால், தமிழ் மக்கள் அனைவரும் பெரும்பான்மையின வேட்பாளருக்கு வாக்களிப்பதற்குப் பதிலாக, அத்தமிழ் பொதுவேட்பாளருக்கே வாக்களிப்பார்கள். தமிழர்கள் மிகநீண்டகாலமாக ஏமாற்றப்பட்டிருக்கின்றார்கள்.

எனவே, இதுவரை காலமும் சிங்கள அரசியல்வாதிகளால் தமிழ்மக்கள் எவ்வாறு ஏமாற்றப்பட்டார்கள் என்பதை உலகுக்கு எடுத்துரைப்பதற்கு இது மிகச்சிறந்த சந்தர்ப்பமாகும். அதிகாரம் மிக்க இடத்திலிருந்து தமிழர்களின் பிரச்னைகளை எடுத்துரைப்பதற்கு தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படுவது மிகமுக்கியமானதாகும் - என்றார்.

## பொலிஸ்...

புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

மேலும் யுக்திய நடவடிக்கையின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் இந்த ஆண்டில் 44 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் கடந்த வருடம் ஆணைக்குழுவுக்கு 9 ஆயிரத்து 714 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## கச்சதீவை...

அனுமதித்திருக்க வேண்டும். இந்திய மீனவர்கள் பயன்படுத்தும் இழுவைப் படகுகள் தொடர்பான பிரச்னையே உள்ளது. இதையே இலங்கை அரசாங்கமும் மீனவர்களும் கூறுகின்றனர்.

போருக்கு பிறகு இலங்கைக்கு இந்திய அரசு நிறைய செய்துள்ளது. மருத்துவமனைகள், வீடுகள், அம்புலன்ஸ்கள், டிராக்டர்கள், படகுகளை நன்கொடையாக வழங்கியுள்ளது. கச்சதீவுக்கு ஆண்டுக்கு ஒருமுறையே இரு நாட்டு மீனவர்களும் வருகை தருகின்றனர்.

கச்சதீவில் கட்டப்பட்டுள்ள நிரந்தர கட்டமைப்புகள் தவறாகப் பயன்படுத்தப்படலாம் என்ற அச்சம் இந்திய தரப்பில் உள்ளது.

இந்தப் பிரச்னைக்கு சாத்தியமான தீர்வு என்னவென்றால் மீனவர்களை இலங்கை கடற்பரப்பில் மீன் பிடிக்க இலங்கை அரசுடன் பேச்சு நடத்தலாம். இதேபோன்று, இலங்கை மீனவர்கள் இந்திய கடற்பரப்பை பயன்படுத்தவும் அனுமதிக்க வேண்டும் - என்றார். (ஐ)

## இன்று யாழ்...

நடைபெறவுள்ளது. இழக்கப்படுகின்ற கல்வி உரிமைகளை வென்றெடுப்போம்! ஆசிரியர் - மாணவர்களின் உரிமைகளை வென்றெடுப்பது எப்படி?" எனும் கருப்பொருளில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் மாநாட்டில் அந்த சங்கத்தின் செயலாளர் மகிந்த ஜயசிங்க மற்றும் தேசிய அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்

இதனையடுத்து யாழ்ப்பாண மாவட்ட வங்கி மற்றும் நிதி அமைப்பின் மாநாடு நடைபெறும்.

இந்த மாநாட்டில் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் வசந்த சமரசிங்க, தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகர், ஆகியோர் கலந்துகொள்வர். (ஐ)

ஈழநாடு Eelanadu

# தேர்தல்முறை சீர்திருத்தம் இந்த அரசில் நடைபெறாது!

## மனோவிடம் ரணில், விஜயதாச உறுதி



**கொழும்பு, ஏப். 04**

**தேர்தல் முறை சீர்திருத்தம், எதிர்வரும் தேர்தல்களை தொடர்புபடுத்தாது. இவ்விவகாரம் அடுத்து வரும்பாராளுமன்றத்துக்கு ஒத்திவைக்கப்படும். அது பற்றி புதிய பாராளுமன்றத்தில் கலந்து உரையாடுவோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் விஜேதாச ராஜபக்ச ஆகியோர் தனக்கு உறுதி அளித்துள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.**

மனோ கணேசன் எம்பி இதுபற்றி ஊடகங்களுக்கு கூறியதாவது-

தற்போதைய விகிதாசார தேர்தல் முறையை மாற்றும் சீர்திருத்தம் தேவையற்றது என்ற நிலைபாட்டை தமிழ் முற்போக்குக் கூட்டணி அன்று முதல் எப்போதும் கொண்டுள்ளது. இதுவே எமது நிலைபாடாக பாராளுமன்ற தேர்தல் சீர்திருத்த தெரிவுக்குழுவிலும் தொடர்ச்சியாக இருந்துள்ளது. அன்றைய அமைச்சர், இன்றைய பிரதமர் தினேஷ் குணவர்த்தன, தலைமையில் கடைசியாக இடம்பெற்ற தேர்தல் சீர்திருத்தக் தெரிவுக் குழுவில், தேர்தல் முறை சீர்திருத்தம் தொடர்பில் ஏகமனதாக தீர்மானம் ஏற்பட்டது போன்ற தோற்றப்பட்டை அரசாங்கம் காட்ட முயல்கிறது. இது பச்சை பொய்.

16 உறுப்பினர்களில் சரிபாதி 8 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவுக்குழு அறிக்கையை நிராகரித்து, அறிக்கையில் கையெழுத்திட மறுத்துவிட்டோம். அங்கே ஏற்பட்ட ஒரேயோரு ஏகமனதான தீர்மானம், சட்டத்தை திருத்தி, விகிதாசார முறையில் மாகாணசபைகள் தேர்தல்களை நடத்துவது என்பதாகும். அதையும்கூட அரசாங்கம் செய்யவில்லை. இந்நிலையில் திடீரென அமைச்சரவையில் தேர்தல் முறை சீர்திருத்தம் வேண்டும் என்று ஒரு நாள், பிறகு இப்போது வேண்டாம் என்று இன்னொரு நாள் தீர்மானிப்பது கேலிக்கூத்து ஆகும்.

இந்நிலையில் கடந்த வாரம் ஜனாதிபதியை நான் சந்தித்த போது இது தொடர்பில் தற்போது முன்னெடுப்புகள் இல்லை என்றார். அதேபோல், சில தினங்களுக்கு முன் நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் விஜேதாச ராஜபக்சவை சந்தித்தபோது அவரும் இதையே எனக்கு தெரிவித்தார். ஆகவே இந்த பிரச்னை இப்போதைக்கு முடிவுக்கு வருகிறது.

இந்நாட்டில் எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம் மக்கள் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே சுமார் 60 விகிதமானோர் பல மாவட்டங்களில் சிதறி வாழ்கிறார்கள். எனவே, எமது மக்களை பாதிக்கும் எந்தவொரு அடாத்தான, தன்னிச்சையான தேர்தல் முறை மாற்றங்களையும் நாம் ஏற்க மாட்டோம். விகிதாசார முறையை மாற்றாமல் உள்ளக மாற்றங்களை பற்றி வேண்டுமானால் நாம் பேசலாம். இது தமிழ் முற்போக்கு கூட்டணியின் தொன்று தொட்டு வரும் நிலைபாடு ஆகும். எதிர்வரும் தேர்தல்களில் பெரும்பான்மை கட்சிகளுடன் உடன்பாடுகள் காணும் போது இதுவும் எமது பிரதான நிபந்தனைகளில் ஒன்றாக இருக்கும்-என்றார். (அ)

# ஒரே நாளில் 2 தேர்தல்கள்

## பகிரங்கப்படுத்தினார் உதய கம்மன்பில



கொழும்பு, ஏப். 04

ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலை ஒரே நாளில் நடத்துவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக அரசியல் வட்டாரங்களிலிருந்து தமக்கு தகவல் அறிய கிடைத்ததாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில நேற்று புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒரே நாளில் நடத்துவதற்கு சட்டத்தில் எவ்வித தடையும் இல்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதே ரணில் விக்கிரமசிங்கவின் தேவையாக உள்ளது. ஆனால் இது ஜனாதிபதிதியின் அதிகாரத்தை குறைக்கின்றது.

முதலில் பொதுத் தேர்தலை நடத்துவதே பசிலின் விருப்பமாக உள்ளது.

இதன் காரணமாக ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒரே நாளில் நடத்துவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல் தேர்தல்களை ஒரே நாளில் நடத்துவதே சிறந்தது-என்றார். (அ)

# யாழ்ப்பாண குடாநாட்டில் நேற்று முதல் இறுக்கமான போக்குவரத்து நடைமுறை!

யாழ்ப்பாணம், ஏப். 04

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நேற்று முதல் போக்குவரத்து நடைமுறைகள் இறுக்கமாகக் கண்காணிக்கப்படும். அதற்குரிய சிறப்புச் செயற்றிட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பிரதிப்பொலிஸ் மா அதிபர் காலிங்க ஜெயசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

யாழ்ப்பாணக் குடாநாட்டின் போக்குவரத்தைச் சீர்செய்வது தொடர்பில் பல்வேறு செயற்றிட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. யாழ்ப்பாணத்தில் தலைக்கவசம் இல்லாமல் வாகனங்களைச் செலுத்துகின்றவர்கள், திறன்பேசிகள் மற்றும் அலைபேசிகளைக் கதைத்தபடி சாரத்தியத்தில் ஈடுபடுகின்றவர்கள், பாதசாரிகள் கடவைகள் இருக்கத் தக்கதாக அதற்கு அருகாக வீதியைக் கடக்கின்றவர்கள், வீதிகளில் வாகனங்களின் பயணப்பாதையில் எச்சில், வெற்றிலை என்பனவற்றைத் துப்புகின்றவர்கள், போக்குவரத்து ஒழுக்க மீறல்களில் ஈடுபடுகின்றவர்கள் மீது நேற்று முதல் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

அத்துடன், பாடசாலைகள், கல்வி நிலையங்கள் மற்றும் வணிக வளாகங்களுக்கு அருகாகவும் நெரிசல் மிகுந்த இடங்களிலும் கூடுதலான பொலிஸார் களமிறக்கப்பட்டு வீதிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் நேற்று முதல் பலப்படுத்தப்படுகின்றன. கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட போக்குவரத்து விழிப்புணர்வுத் திட்டத்தை இந்த வருடமும் தொடர்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் சீரானதும் ஆரோக்கியமானதுமான போக்குவரத்தை மேற்கொண்டு, தேவையற்ற அசௌகரியங்களைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்-என்றார். (அ)

# யாழ்ப்பாண விமான நிலையம் தனியார்துறைக்கு குத்தகைக்கு

## முதலீட்டாளர்களின் விருப்பங்களை கோரிய அரசு

கொழும்பு, ஏப். 04

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை தனியார் துறையினருக்கு குத்தகைக்கு வழங்குவது தொடர்பில் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் விருப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கு பொருத்தமான முதலீட்டாளரைத் தெரிவு செய்ததன் பின்னர் மேலதிக பணிகள் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டார்.

இதேவேளை, மத்தளை விமான நிலையத்தின் செயல்பாடுகளை இந்திய மற்றும் ரஷ்ய நிறுவனங்களுக்கு மாற்றுவதற்கான யோசனை, நிதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (அ)

# தென்னக்கோனின் நடவடிக்கை; கத்தோலிக்க திருச்சபை விசனம்

கொழும்பு, ஏப். 04

கடந்த உயிர்த்த ஞாயிறு தினத்தன்று பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிக்கு விஜயம் செய்தமை தொடர்பாக நேற்று கொழும்பு பேராயரின் உத்தி யோகபூர்வ இல்லத்தில் ஊடக சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடந்த 31ஆம் திகதி பொலிஸ் மா அதிபர் தேஷ்பந்து தென்னக்கோன் கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயத்திற்குச் சென்று

பாதுகாப்பு நிலைமைகளை பார்வையிட்டதுடன் தாக்குதலில் உயிரிழந்த உறவினர்களின் நலன்களையும் கேட்டறிந்தார்.

இந்நிலையில் இந்த நடவடிக்கைக்கு கத்தோலிக்க திருச்சபை நேற்று விசனம் வெளியிட்டுள்ளது. (அ)

# போதைமாத்திரை விற்பனை செய்த 6 இளைஞர்கள் கைது!

## யாழ்ப்பாணத்தில் பொலிஸ் அதிரடி

யாழ்ப்பாணம், ஏப். 04

யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதை மாத்திரை வியாபாரத்தில் ஈடுபட்ட 6 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் நிஷாந்தவின் கண்காணிப்பில் இயங்கும் யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

யாழ் மாவட்ட குற்றதடுப்புப் பிரிவினரும் இணைந்து நடத்திய சுற்றிவளைப்பில் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த குருநகரை சேர்ந்த ஐவரும் யாழ்ப்பாணம் நாவாந்துறையை சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் 18,19,20,21 வயதுடையவர்கள்.

யாழ் நகரையண்டிய பகுதிகளில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதை மாத்திரை விற்பனையில் ஈடுபடும் கும்பல் பற்றிய தகவல் கிடைத்ததும், நேற்று சென்.பற்றிக்ஸ் பாடசாலைக்கு அருகில் போதை மாத்திரை விற்பனையில் ஈடுபட்ட இருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில் மேலும் 3 பேர் போதை மாத்திரைகளுடன் கைதாகினர்.

மேலதிக விசாரணையில், போதை மாத்திரை வலையமைப்பின் பிரதான சந்தேகநபரான நாவாந்துறை இளைஞனை பொலிசார் கைது செய்ய முற்பட்டபோது, அவர் முச்சக்கர வண்டியை கைவிட்டு, தப்பியோடினார். அவரை பொலிசார் விரட்டிப் பிடித்தனர்.

அவரது வீட்டிலிருந்து 300 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டன.

அவர் கொழும்பிலிருந்து போதை மாத்திரைகளை பெறும் வழிகள் தொடர்பில் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மயங் யாதவ் அபார பந்துவீச்சு; பெங்களூரு அணி சுருண்டது!

பெங்களூரு, ஏப். 04

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 15ஆவது லீக் போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணியை 28 ஓட்டங்களில் வென்றுள்ளது லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ். இந்த தொடரில் முதல் முறையாக சகல விக்கெட்களையும் இழந்த அணியாக பெங்களூரு உள்ளது. அதோடு சொந்த மைதானத்தில் இரண்டாவது போட்டியில் தோல்வியை தழுவி உள்ளது.

பெங்களூருவில் உள்ள எம்.சின்னசாமி கிரிக்கெட் மைதானத்தில் இந்த போட்டி நடைபெற்றது. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற பெங்களூரு பந்துவீச்சைத் தெரிவு செய்தது. முதலில் பேட் செய்த லக்னோ 20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 181 ஓட்டங்கள் எடுத்தது.

182 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை பெங்களூரு விரட்டியது. அணித்தலைவர் டூப்ளசிஸ் மற்றும் விராட் கோலி இணைந்து இன்னிங்ஸை ஆரம்பித்தனர். 16 பந்துகளில் 22 ஓட்டங்கள் எடுத்து கோலி ஆட்டமிழந்தார். அவரை தமிழகத்தை சேர்ந்த மணிமாறன் சித்தார்த் வெளியேற்றினார். 19 ஓட்டங்கள் எடுத்த டூப்ளசிஸ் ரன் அவுட் ஆனார்.

தொடர்ந்து கிளென் மக்ஸ்வெல் மற்றும் கமரூன் கிறீனை அடுத்தடுத்த ஓவர்களில் வெளியேற்றினார் மயங்க் யாதவ். அனுஜ் ராவத் 11 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். 29 ஓட்டங்கள் எடுத்து பெங்களூரு அணிக்கு நம்பிக்கை தந்த ரஜத் பட்டிதரை ஆட்டமிழக்க செய்தார் மயங்க்.

தினேஷ் கார்த்திக், மயங்க் தாகர், லோம்ரோர், சிராஜ் ஆகியோர் விக்கெட்டை இழந்தனர். இதில் லோம்ரோர் 13 பந்துகளில் 31 ஓட்டங்கள் எடுத்தார். அவர் இம்பக்ட் பிளேயராக துடுப்பெடுத்தாடியிருந்தார். 19.4 ஓவர்களில் 153 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தது பெங்களூரு. இதன் மூலம் லக்னோ அணி வெற்றி பெற்றது.

துடுப்பாட்டம், பந்துவீச்சு களத்தடுப்பு என அனைத்திலும் சிறப்பான செயல்திறனை வெளிப்படுத்தி இருந்தது. லக்னோ வீரர்கள் நிக்கோலஸ் பூரண் மற்றும் தேவ்தத் படிக்கல் களத்தில் துடிப்பாக செயல்பட்டு களத்தடுப்பை மேற்கொண்டனர். இருவரும் தலா ஒரு ரன் அவுட் மற்றும் 3 பிடிகளை பிடித்திருந்தனர். இந்தப் போட்டியில் ஆட்ட நாயகன் விருதை மயங்க் யாதவ் வென்றார். 4 ஓவர்கள் வீசி 14 ஓட்டங்கள் கொடுத்து 3 விக்கெட்களை அவர் வீழ்த்தி இருந்தார்.



முன்னதாக, இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் லக்னோவின் தொடக்க வீரர்களான குயின்ரன் டி கொக் - கே. எல். ராகுல் களமிறங்கினர். டி கொக் ஒரு புறம் பந்துகளை பறக்கவிட கிளன் மக்ஸ்வெல் வீசிய 6ஆவது ஓவரில் 20 ஓட்டங்களில் ஆட்டமிழ்நதார் கே. எல்.ராகுல். அவரைத் தொடர்ந்து வந்த தேவ்தத் படிக்கல் 6 ஓட்டங்களில் விக்கெட்டானார்.

ஸ்ரொய்னிஸ் 2 சிக்சர்கள் விளாசினார். ஆனால், 24 ஓட்டங்களில் பெவிலியன் திரும்பினார். மறுபுறம் அதிரடியாக ஆடிக்கொண்டிருந்த டி கொக் அணியின் ஓட்டத்தை உயர்த்தி நம்பிக்கை கொடுத்தார். 56 பந்துகளில் 81 ஓட்டங்களை குவித்திருந்த டி கொக்கை 17ஆவது ஓவரில் வெளியேற்றினார் ரீஸ் டாப்லி.

அதன்பிறகு களத்துக்கு வந்த ஆயுஷ் படோனி டக் அவுட். கடைசி கட்டத்தில் நிக்கோலஸ் பூரண் 18ஆவது ஓவரில் ஹட்ரிக் சிக்ஸரை விளாசி மிரட்டினார். இதன் மூலம் ஐ. பி. எல். தொடரில் அவர் தனது 100ஆவது சிக்ஸரை எட்டினார்.

19-வது ஓவரில் 2 சிக்ஸர்களுடன் பூரண் அதிரடி காட்ட நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு லக்னோ 181 ஓட்டங்களைச் சேர்த்தது. பூரண் 40 ஓட்டங்களுடனும், குர்ணல் பாண்ட்யா ஓட்டம் எதுவும் எடுக்காமல் களத்தில் இருந்தனர்.

பெங்களூரு அணி தரப்பில் மக்ஸ்வெல் 2 விக்கெட், சிராஜ், ரீஸ் டாப்லி, யஷ் தயாள் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# உலகக் கிண்ணத் தொடரில் ஸ்ரோக்ஸ் பங்கேற்க மாட்டார்!

லண்டன், ஏப். 04

ஜூன் மாதம் நடைபெறவுள்ள இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்கப் போவதில்லை என்று இங்கிலாந்து வீரர் பென் ஸ்ரோக்ஸ் அறிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரரும் டெஸ்ட் அணித்தலைவருமான பென் ஸ்ரோக்ஸ் முழு உடல் தகுதி பெறவும் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு முன்னுரிமை அளிக்கும் விதமாகவும் தற்போது நடைபெற்றுவரும் ஐ. பி. எல். மற்றும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள இருபது - 20 உலகக் கிண்ணத் தொடர்களில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக உடற்தகுதி பிரச்னையால் போராடி வருகிறார் பென் ஸ்ரோக்ஸ். சமீபத்தில் நடந்துமுடிந்த இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பென் ஸ்ரோக்ஸ் இங்கிலாந்து அணியை வழிநடத்தினார். இந்த டெஸ்ட் தொடருக்கு முன்னதாகதான் முழங்கால் அறுவை சிகிச்சை செய்துகொண்டார் பென் ஸ்ரோக்ஸ்.

முழங்கால் பிரச்னையால் சில காலமாக பந்துவீசுவதை தவிர்த்து வரும் அவர், இந்தியாவுக்கு எதிரான ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஒரே ஒரு போட்டியில் மட்டுமே பந்துவீசினார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில்தான் தனது பந்துவீச்சு திறனை மேம்படுத்தும் நோக்கிலும், டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு முன்னுரிமை அளிக்கும் நோக்கிலும் ஐ. பி. எல். மற்றும் ரி -20 உலகக் கிண்ணத் தொடர்களில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இங்கிலாந்து ரி - 20 கிரிக்கெட் அணியை இம்முறை ஜோஸ் பட்லர் வழிநடத்தவுள்ளார். அணியில் பென் ஸ்ரோக்ஸ் இல்லாதது நிச்சயமாக இங்கிலாந்துக்கு ஒரு பெரிய அடியாகும். ஏனென்றால், கடந்த 2022 ரி - 20 உலகக் கிண்ணத்தை இங்கிலாந்து வெல்ல முக்கிய காரணமாக இருந்தவர் பென் ஸ்டோக்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# டெஸ்ட் தொடரை முழுமையாக தன்வசமாக்கியது இலங்கை அணி!

சட்டோகிராம், ஏப். 04

பங்களாதேஷ் அணியை 192 ஓட்டங்களால் இலங்கை அணி வெற்றி கொண்டது. இரண்டாவது போட்டியையும் வென்றதன் மூலம் டெஸ்ட் தொடரை முழுமையாக வெற்றி கொண்டது இலங்கை அணி.



இலங்கை - பங்களாதேஷ் அணிகள் இடையிலான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சட்டோகிராமில் நடைபெற்றது. இதில் முதல் இன்னிங்ஸில் முறையே இலங்கை அணி 531 ஓட்டங்களும் பங்களாதேஷ் அணி 178 ஓட்டங்களும் எடுத்தன.

353 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன் னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி 3ஆவது நாள் முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 102 ஓட்டங்கள் எடுத் திருந்தது. 4ஆவது நாளான நேற்று முன்தினம் தொடர்ந்து ஆடிய இலங்கை அணி 40 ஓவர்களில் 7 விக்கெட் இழப் புக்கு 157 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. பிரபாத் ஜெயசூர்யா 28 ஓட்டங்களுடனும் விஸ்வ பெர்னாண்டோ 8 ஓட்டங்களுடனம் களத்தில் இருந்தனர்.

இதைத்தொடர்ந்து 511 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி பங்களாதேஷ் அணி 2ஆவது இன்னிங்ஸை ஆடியது. சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்த அந்த அணி ஆட்ட நேர முடிவில் 67 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கு 268 ஓட்டங்களுடன் தோல்வியின் விளிம்பில் தத்தளித்தது.

ஆட்ட நேர முடிவில் மெஹிதி ஹசன் மிராஸ் 44 ஓட்டங்களுடனும், தைஜுல் இஸ்லாம் 10 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். இந்த நிலையில், நேற்று இறுதிநாள் ஆட்டத்தில், தொடர்ந்து துடுப்பெடுத்தாடியது பங்களாதேஷ். 2ஆவது இன்னிங்ஸில் 85 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 318 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இதன் மூலம் 192 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அபார வெற்றி பெற்றது.

பங்களாதேஷ் தரப்பில் வெற்றிக்காக போராடிய மெஹிதி ஹசன் மிராஸ் 81 ஓட்டங்கள் எடுத்த நிலையில் களத்தில் இருந்தார்.

இலங்கை தரப்பில் லஹிரு குமார 4 விக்கெட், காமிந்து மெண்டிஸ் 3 விக்கெட் எடுத்தனர். இந்த வெற்றியின் மூலம் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என இலங்கை முழுமையாக கைப்பற்றியது. (ஐ)

- சவூதி புரோ லீக் உதைபந்தாட்டம் -

# கோல் மழை பொழிந்தது ரொனால்டோவின் அணி

ரியாத், ஏப். 04

சவூதி புரோ லீக் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற போட்டியில் ரொனால்டோ தலைமையிலான அல் நாசர் - அபா அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் அல் நாசர் வீரர்கள் ருத்ர தாண்டவமாடி கோல் மழை பொழிந்தனர். அபா அணியால் பதிலுக்கு ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. முழு நேர ஆட்ட முடிவில் அல் நாசர் அணி 8-0 என்ற கோல் கணக்கில் அபா அணியை வெற்றி கொண்டது.

அல் நாசர் தரப்பில் ரொனால்டோ ஹட்ரிக் கோல் அடித்து அசத்தினார். மேலும் அந்த அணியில் அப்துல்சிஸ் அல் -அலிவா 2 கோல்களும், சதியோ மேன், அப்துல் மஜீத் மற்றும் அப்துல்ரகுமான் ஆகியோர் தலா 1 கோலும் அடித்தனர்.

இதுவரை முடிவடைந்துள்ள போட்டிகளின் முடிவில் அல் நாசர் 62 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் உள்ளது. அல் ஹிலால் 74 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. (ஐ)



# சிரியாவில் ஈரான் ராணுவ அதிகாரிகளை குறிவைத்து தாக்கியதா இஸ்ரேல்?

# ஈரான் என்ன செய்யப் போகிறது?

சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸில் உள்ள ஈரான் தூதரக கட்டடத்தின் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதாகவும் அதில் ஏழு அதிகாரிகள் கொல்லப்பட்டதாகவும் ஈரான் ராணுவம் தெரிவித்துள்ளது.

ஈரானின் உயரடுக்கு குத்ஸ் படையின் மூத்த தளபதியான பிரிகேடியர் ஜெனரல் முகமது ரெசா ஜாஹேடி, மற்றும் அவரது துணைத் தளபதி பிரிகேடியர் ஜெனரல் முகமது ஹாடி ஹாஜி ரஹிமி ஆகியோரும் இத்தாக்குதலில் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் மற்றும் சிரியாவின் அரசாங்கங்கள் இந்தத் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்திருக்கின்றன.

இத்தாக்குதல் சிரியாவிலுள்ள ஈரானிய தூதரகத்திற்கு அருகிலுள்ள கட்டடத்தை முழுவதும் அழித்தது.

இதுகுறித்து இஸ்ரேல் இராணுவம் ‘வெளிநாட்டு ஊடக அறிக்கைகள் குறித்து கருத்து தெரிவிப்பதில்லை’ என தெரிவித்துள்ளது.

### என்ன நடந்தது?

திங்களன்று (ஏப்ரல் 1) இலங்கை நேரப்படி மாலை சுமார் 07:30 மணியளவில் டமாஸ்கஸின் மேற்கிலிருக்கும் மெசே மாவட்டத்தின் நெடுஞ்சாலையில் இருந்த ஈரானிய தூதரகக் கட்டடத்தை இஸ்ரேலிய விமானம் குறிவைத்ததாக சிரியாவின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சிரியாவின் வான் பாதுகாப்புப் படையினர் சில ஏவுகணைகளை சுட்டு வீழ்த்தினர். ஆனால் மற்ற ஏவுகணைகள் இலக்கைத் தாக்கி ‘முழு கட்டடத்தையும் அழித்து, உள்ளே இருந்த அனைவரையும் காயப்படுத்தி விட்டதாக’ சிரியாவின் பாதுகாப்பு அமைச்சகம் மேலும் கூறியது.

இடிபாடுகளுக்கு அடியில் இருந்து உடல்களையும் காயமடைந்தவர்களையும் மீட்பதற்கான பணிகள் நடைபெற்று வருவதாக சிரியாவின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்தது. ஆனால் எத்தனை பேர் உயிரிழந்தனர், அவர்களின் பெயர் ஆகிய தகவல்களை குறிப்பிடவில்லை.

### கொல்லப்பட்ட ஈரானின் மிக உயரிய அதிகாரி

சம்பவ இடத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் இடிந்து விழுந்த ஒரு பல மாடிக் கட்டடத்தின் இடிபாடுகளிலிருந்து புகை மற்றும் தூசி எழுவதைக் காட்டியது. அடுத்துள்ள ஈரானிய தூதரகத்திற்கு குறிப்பிடத்தக்க சேதம் ஏதும் ஏற்பட்டதாக தெரியவில்லை.

ஈரானிய தூதர் ஹொசைன் அக்பரி கூறுகையில், இஸ்ரேலிய எவ்-35 போர் விமானங்கள் ‘தான் வசிக்கும் இடத்தையும், தூதரகத்தின் தூதரகப் பகுதியையும் குறிவைத்தன’ என்றார். சில தூதர்கள் உட்பட ஐந்து முதல் ஏழு பேர் வரை கொல்லப்பட்டதாக அவர் ஈரானிய அரசு




தொலைக்காட்சியிடம் தெரிவித்தார்.

பின்னர், ஈரான் ராணுவம் வெளியிட்ட அறிக்கையில், அதன் அதிகாரிகள் ஏழு பேர் கொல்லப்பட்டதாகவும், அதில் ‘தளபதிகள் மற்றும் மூத்த இராணுவ ஆலோசகர்களான’ பிரிகேடியர் ஜெனரல் முகமது ரேசா ஜாஹேதி மற்றும் பிரிகேடியர் ஜெனரல் முகமது ஹாடி ஹாஜி-ரஹிமி ஆகியோரும் அடங்குவர், என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

63 வயதான ஜாஹேதி, ஈரான் ராணுவத்தின் வெளிநாட்டு நடவடிக்கைப் பிரிவான குட்ஸ் படையில மூத்த அதிகாரியாகவும், 2008 மற்றும் 2016-க்கு இடையில் லெபனான் மற்றும் சிரியாவில் தளபதியாகவும் பணியாற்றியதாகவும் ஈரானிய ஊடகங்கள் தெரிவித்தன.

ஜாஹேதி, இஸ்ரேலின் தாக்குதலில் கொல்லப்பட்ட மிக முக்கியமான ஈரானிய அதிகாரிகளில் ஒருவராகக் கருதப்படுகிறார்.

### ஈரான் என்ன செய்யப் போகிறது?

இந்தத் தாக்குதலில் குட்ஸ் படையின் உயர்மட்டத் தலைவர், ஈரானிய ஆலோசகர்கள் இருவர், மற்றும் ஈரான் ராணுவத்தின் ஐந்து உறுப்பினர்கள் உட்பட எட்டு பேர் கொல்லப்பட்டதாக இங்கிலாந்தில் இயங்கும் மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. இவ்வமைப்பு சிரியாவில் களத்திலிருந்து தகவல் சேகரித்துத் தருபவர்களைக் கொண்டு பணியாற்றுகிறது.

சிரியாவின் வெளியுறவு அமைச்சர் பைசல் மெக்தாத், இந்தத் தாக்குதலை ‘கொடூரமான பயங்கரவாதத் தாக்குதல்’ என்று விமர்சித்தார். மேலும் இது ‘பல அப்பாவி மக்களை’ கொன்றதாகவும் கூறினார்.

அவருடனான தொலைபேசி உரையாடலில், ஈரானிய வெளியுறவு அமைச்சர் ஹொசைன் அமீர்-அப்துல்லாஹியன் இந்த தாக்குதலை ‘அனைத்து சர்வதேச கடமைகள் மற்றும் மரபுகளை மீறய செயல் என்று குறிப்பிட்டார். மேலும்



‘இந்தத் தாக்குதலில் விளைவுகள் இஸ்ரேலின் வலதுசாரி சியோனிச ஆட்சியினால் ஏற்பட்டது என்று குற்றம் சாட்டினார்’ என ஈரானிய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு ‘சர்வதேச சமூகம் சரியான பதிலடி கொடுக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்’, என்று ஈரானிய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

### இஸ்ரேலின் முந்தைய தாக்குதல்கள்

சமீபத்திய ஆண்டுகளில் சிரியாவில் உள்ள இலக்குகள் மீது நூற்றுக்கணக்கான தாக்குதல்கள் நடத்தியதாக இஸ்ரேல் முன்னர் ஒப்புக்கொடுள்ளது. இவை ஈரான் ராணுவம் பயிற்சியளிப்பதாகக் கூறப்படும் ஆயுதக் குழுக்களை அழிக்கும் நோக்குடன் நடத்தப்படவை என்று இஸ்ரேல் கூறியுள்ளது.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் காஸாவில் போர் தொடங்கியதில் இருந்து இஸ்ரேலிய தாக்குதல்கள் முடுக்கிவிடப்பட்டதாக கூறப்படுகிறது. வடக்கு இஸ்ரேல் மீது ஹெஸ்புலா நடத்திய தாக்குதலுக்கும், லெபனான் மற்றும் சிரியாவில் உள்ள ஈரான் ஆதரவுக் குழுக்கள் நடத்திய எல்லை தாண்டிய தாக்குதலுக்கும் இது பதிலடி எனக் கூறப்படுகிறது.

ஆனால் திங்கட்கிழமை (ஏப்ரல் 1) இஸ்ரேல் சிரியா மீது நடத்திய தாக்குதல் நிலைமையை மிகவும் மோசமாக்கும் என்று கருதப்படுகிறது.

ஈரான் மற்றும் அதன் கூட்டாளிகளின் உறுதியை இஸ்ரேல் சோதிப்பது போல் தெரிகிறது. தங்கள் எதிரிகள் மீது அழுத்தத்தை அதிகரிப்பதில் இஸ்ரேல் தீவிரம் காட்டுகிறது.

இந்தத் தாக்குதலுக்கு இஸ்ரேல் மீது ஒரு பதிலடி இருக்கும். ஆனால் அது பொதுவாக எதிர்பார்க்கப்படும்படி ஏவுகணைத் தாக்குதலாக இருக்காது, ஒருவித சைபர் தாக்குதலாக இருக்கலாம்.

### தொடர் தாக்குதல்கள்

இந்தத் தாக்குதல் தொடர்பாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அறிந்திருந்ததாக அமெரிக்க அரசின் செய்தித் தொடர்பாளர் கூறினார்.


திங்களன்று செய்தியாளர்களிடம் பேசிய இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகளின் செய்தித் தொடர்பாளர் ரியர் அட்மிரல் டேனியல் ஹகாரி, தெற்கு இஸ்ரேலிய நகரமான ஈலாட்டில் உள்ள கடற்படைத் தளத்தின் மீது நடந்த ட்ரோன் தாக்குதல் ‘மிகவும் தீவிரமான சம்பவம்’ என்றார். அந்த ட்ரோன் ‘ஈரானால் தயாரிக்கப்பட்டு இயக்கப்பட்டது’ என்று அவர் கூறினார்.

கடந்த வெள்ளியன்று டமாஸ்கஸ் மற்றும் வடக்கு சிரியாவின் நகரமான அலெப்போ மீது இஸ்ரேலால் நடத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் தாக்குதல்களைத் தொடர்ந்து ஈலாட்டில் தாக்குதல் நடந்தது. அதில் 38 சிரிய வீரர்கள் மற்றும் ஈரான் ஆதரவு பெற்ற லெபனான் ஆயுதக் குழுவான ஹெஸ்புலாவின் ஏழு உறுப்பினர்கள் உட்பட 53 பேர் கொல்லப்பட்டதாக மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பு அமைப்பு கூறியது.

கடந்த ஜனவரி மாதம், இஸ்ரேல் நடத்தியதாகக் கூறப்படும் மெஸ்ஸேவில் நடந்த மற்றொரு தாக்குதல் ஐந்து மூத்த ஈரானிய அதிகாரிகளையும் பல சிரிய பாதுகாப்பு அதிகாரிகளையும் கொன்றது.

ஈரானின் இராணுவ நடவடிக்கைகளை எதிர்த்து சிரியாவில் தாக்குதல்களை நடத்தியதை இஸ்ரேல் முன்பு ஒப்புக்கொண்டது.

சிரியாவின் உள்நாட்டுப் போரில் ஜனாதிபதி பஷர் அல்-அசாத்தின் படைகளுக்கு ‘ஆலோசனை வழங்க’ தனது ராணுவத்தினரை அனுப்பியதாக ஈரான் கூறியது. மேலும், அவர்கள் போரில் ஈடுபடவில்லை என்று ஈரான் கூறியது.



ஈழநாடு



# கச்சத்தீவு: இந்த 300 அடி நிலம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் ஏன் முக்கியமானது?

முரளிதரன் காசிவிஸ்வநாதன்

கச்சத்தீவு குறித்த சர்ச்சை பல வருடங்களுக்குப் பிறகு மீண்டும் முன்னணிக்கு வந்துள்ளது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாக் நீரிணை பகுதியில் எல்லை பிரிக்கப்படும்போது அங்குள்ள கச்சத் தீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது. 1974-இல் நடந்த இந்த விவகாரம் தற்போது மீண்டும் ஒரு மிகப் பெரிய சர்ச்சையாக உருவெடுத்துள்ளது. கச்சத்தீவு குறித்தும் இந்த சர்ச்சை குறித்தும் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய தகவல்களைப் பார்க்கலாம்.

**கச்சத்தீவு எங்கே இருக்கிறது?**

கச்சத்தீவு இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள பாக் நீரிணை பகுதியில் அமைந்திருக்கிறது. இலங்கையின் நெடுந்தீவிலிருந்து தென்மேற்கு திசையில் 10.5 மைல் தொலைவிலும் ராமேஸ்வரத்திலிருந்து 12 மைல் தொலைவிலும் இந்தத் தீவு அமைந்திருக்கிறது.






BBC

ஒரு மைல் நீளம் கொண்ட இந்தத் தீவின் அதிகபட்ச அகலம் 300 அடி. இந்தத் தீவின் மொத்தப் பரப்பளவு 285.2 ஏக்கர். இங்கே மனிதர்கள் யாரும் வசிப்பதில்லை. இங்கு புனித அந்தோணியார் தேவாலயம் ஒன்று இருக்கிறது. பிப்ரவரி மாதத்தில் இந்தத் தேவாலயத்தில் திருவிழா நடப்பது வழக்கம். இதற்கு இலங்கையில் இருந்தும் தமிழ்நாட்டில் இருந்தும் பக்தர்கள் செல்வது வழக்கம். 20-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் ராமநாதபுரத்தைச் சேர்ந்த சீனிக்குப்பன் படையாச்சி என்பவர் இந்த ஆலயத்தைக் கட்டியதாக சொல்லப்படுகிறது.

‘தங்கச்சி மடத்தைச் சேர்ந்த பாதிரியார் ஒருவர் இந்தக் கோவிலில் பூசைவைப்பார்’ என ராமநாதபுரம் கெஸட்டியர் குறிப்பிடுறது. 1983-இல் இலங்கையில் உள்நாட்டுப் போர் வெடித்த பிறகு, இந்த திருவிழாவுக்கு பக்தர்கள் செல்வது தடைபட்டது. உள்நாட்டுப் போர் முடிந்த பிறகு 2012-ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் திருவிழா நடந்துவருகிறது. இரண்டாம் உலகப் போர் காலகட்டத்தில் பிரிட்டிஷார் இந்தத் தீவை, வெடிகுண்டுகளை வெடித்துப் பயிற்சி செய்யப் பயன்படுத்தினார்கள்.

**பாக் நீரிணை பகுதியின் முக்கியத்துவம் என்ன?**

பாக் நீரிணை என்பது இலங்கையின் வடக்குக் கடற்கரைப்பகுதியையும் இந்தியாவின் தென்கிழக்குக் கடற்கரைப் பகுதியையும் இணைக்கும் 22 மைல் அகலமுள்ள ஒரு நீர்ப்பரப்பு. 1755-லிருந்து 1763 வரை சென்னை மாகாணத்தின் ஆளுநராக இருந்த ராபர்ட் பாக் என்பவரின் பெயர் இந்த நீரிணைக்குச் சூட்டப்பட்டுள்ளது.

இதை ஒரு கடல் பகுதி என்பதைவிட, நிலத்தில் கடல் உட்புகுந்த பகுதியாகவே கருதவேண்டும். இந்தப் பகுதியில் கடல் ஆழமில்லாமல் இருக்கும். பாக் நீரிணையையும் மன்னார் வளைகுடாவையும் பாம்பன் நீரிணையால் இணைக்கப்படுகின்றன. இந்த பாம்பன் நீரிணைதான் ராமேஸ்வரத்தை பிரதான தமிழக நிலப்பரப்பிலிருந்து பிரிக்கிறது.

**கச்சத்தீவு பிரச்னை எப்போது துவங்கியது?**

கச்சத்தீவு யாருக்குச் சொந்தம் என்ற பிரச்னை 1920-களிலேயே துவங்கிவிட்டது. பாக் நீரிணை - மன்னார் வளைகுடா பகுதிகளில் எல்லையை வரையறுப்பதற்காக 1921 அக்டோபர் 24-ஆம் தேதி கொழும்பு நகரில் சென்னை மாகாண அதிகாரிகளுக்கும் இலங்கை அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் இலங்கை சார்பாக கலந்துகொண்ட சுங்க வரிக்கான முதன்மை கலெக்டர் ஹார்ஸ்பர்க், கச்சத் தீவு இலங்கைக்கு வரும்படி எல்லையை வகுக்க வேண்டும். இல்லாவிட்டால் மாநாட்டை நிறுத்திவிடலாம் என்று சொன்னார். கச்சத்தீவு இலங்கைக்குச் சொந்தம் என்பதற்கு ஆதாரமாக, இந்திய அரசுடனான ஒரு கடிதப் போக்குவரத்தைச் சுட்டிக்காட்டினார்.

இதை ஏற்காத இந்தியக் குழு, வேண்டுமானால் அந்தப் பகுதியின் மீன்பிடி உரிமையை மட்டும் தருவதாகச் சொன்னது. அதன்படி கச்சத்தீவிலிருந்து மேற்கே மூன்று மைல் வரை இலங்கைக்கு மீன்பிடிக்கும் உரிமை இருப்பதாக ஒரு ஒப்பந்தமும் கையெழுத்தானது. சங்கு அதிகமுள்ள பகுதி மெட்ராஸ் மாகாணத்தின் கீழ் வருவதால், மீன் பிடி உரிமையை விட்டுக்கொடுக்கலாம் என பேச்சு வார்த்தை நடத்திய அதிகாரிகள் நினைத்து, இப்படிச் செய்தார்கள். ஆனால், இந்த ஒப்பந்தத்தை காலனி அலுவலகம் ஏற்கவில்லை. ஆகவே சட்டரீதியாக இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கே வரவில்லை. இருந்தபோதும் பேச்சு வார்த்தையில் ஒப்புக்கொண்டதால், கச்சத்தீவு இலங்கைக்கே சொந்தம் என இலங்கை வாதிட ஆரம்பித்தது.

**இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு என்ன நடந்தது?**

இந்திய சுதந்திரத்திற்குப் பிறகும் இந்தப் பிரச்னை அவ்வப்போது எழுப்பப்பட்டது. 1949-இல் பாக் நீரிணை பகுதியில் இந்தியா கடற்படை ஒத்திகையை நடத்த விரும்பியது. கச்சத்தீவை குண்டு வீசுவதற்கான இலக்காக வைத்துக் கொள்ள விரும்பியது. ஆனால், அந்தப் பகுதி இலங்கைக்குச் சொந்தமானது என்பதால் தங்களது அனுமதியைப் பெற வேண்டுமென இலங்கை கூறியது.

இதற்குப் பிறகு, 1956-ஆம் ஆண்டு மார்ச் மாதம் தனது விமானப் படை குண்டு வீசும் பயிற்சிக்காக கச்சத்தீவைப் பயன்படுத்தப் போவதாக இலங்கை அரசு இந்திய அரசிடம் முன்கூட்டியே தெரிவித்தது. ஆனால், அந்தத் தீவின் உரிமை குறித்த விவகாரம் தெளிவில்லாமல் இருப்பதால் ஒத்திகையை ஒத்திப் போடும்படி இலங்கை அரசிடம் இந்திய அரசு கேட்டுக்கொண்டது. இதற்குப் பதிலளித்த இலங்கை அரசு, கச்சத்தீவு இலங்கையின் பிரிக்க முடியாத பகுதி என்றும் விமானத் தாக்குதல் ஒத்திகையைப் பொறுத்தவரை இறுதி முடிவு எடுக்கப்படவில்லையென்றும் தெரிவித்தது.

1956-இல் தனது கடல் எல்லையானது நிலப்பரப்பிலிருந்து 3 மைல் என்பதில் இருந்து ஆறு கடல் மைல்களாக மாற்றப்பட்டிருப்பதாக இந்தியா அறிவித்தது. 1957-இல் தனது கடற்பரப்பிலிருந்து 100 கடல் மைல் பரப்புக்கு தனது கட்டுப்பாடு இருக்கும் என்றது இந்தியா. 1957-இல் இலங்கையும் தனது கடல் எல்லை 6 நாட்டிகல் மைல் வரை இருக்கும் என்றும் 100 கடல் மைல் பரப்புக்கு தனது கட்டுப்பாடு இருக்கும் என்றும் அறிவித்தது. 1967-இல் தனது கடல் எல்லையை இந்தியா 12 கடல் மைல்களாக அதிகரித்தது. 1970-இல் இலங்கையும் தனது எல்லையை 12 கடல் மைல் தொலைவுக்கு அதிகரித்தது.


**கச்சத்தீவு மீதான உரிமையை கைவிட இந்தியா முடிவுசெய்தது எப்போது?**

1973 ஏப்ரலில் இந்திரா காந்தி இலங்கைக்கு விஜயம் செய்தார். அதே ஆண்டு அக்டோபர் மாதம் இரு நாடுகளின் மூத்த அதிகாரிகளுக்கு இடையில் கூட்டங்கள் நடந்தன. இந்தியா - இலங்கை உறவைத் தீர்மானிக்கும் அனைத்து விஷயங்களும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

(16ம் பக்கம் பார்க்க)



# கச்சத்தீவு: இந்த 300 அடி நிலம்...






(15ம் பக்கத் தொடர்ச்சி)

1964-ஆம் வருட சிறிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்தில் விட்டுப்போன நாடற்ற ஒன்றரை லட்சம் பேரின் குடியுரிமை விவகாரம், இந்தியக் குடியுரிமை வழங்கப்பட்டவர்களை இந்தியாவுக்கு அழைத்துக்கொள்வது, பாக் நீரிணையில் கடல் எல்லையை வரையறுப்பது, கச்சத்தீவு மீதான உரிமை ஆகியவை இந்தக் கூட்டங்களில் விவாதிக்கப்பட்டன. இந்தக் கட்டத்தில்தான் இந்தியா தனது கச்சத்தீவு மீதான உரிமையைக் கைவிட முடிவுசெய்ததாகத் தெரிகிறது.

**முதல் கச்சத்தீவு ஒப்பந்தம் சொல்வது என்ன?**

இந்த ஒப்பந்தம் 1974-ஆம் ஆண்டு ஜூன் 26-ஆம் தேதி கையெழுத்தானது. இதில் பாக் நீரிணைப் பகுதியில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான எல்லைகள் வரையறுக்கப்பட்டன. கச்சத்தீவு இலங்கைக்குச் செல்லும் வகையில் எல்லை வரையறுக்கப்பட்டது.

இருந்தபோதும், இந்த ஒப்பந்தத்தின் 5-வது ஷரத்து, இந்திய மீனவர்களும் அந்தோணியார் கோவிலுக்கு வரும் பக்தர்களும் வழக்கம்போல அந்தப் பகுதிக்கு வரலாம் என்றும் இதற்கென பயண ஆவணங்கள் தேவையில்லையென்றும் கூறியது.

6-வது ஷரத்தின்படி, இந்திய, இலங்கை மீனவர்கள் எல்லை கட்டுப்பாடின்றி இரு நாடுகளின் கடற்பகுதிகளிலும் சென்று வர அனுமதிக்கப்படுவார்கள் எனக் கூறியது. இந்த ஒப்பந்தத்தில் இந்திரா காந்தியும் சிறிமாவோ பண்டாரநாயகவும் கையெழுத்திட்டனர்.

**இரண்டாவது ஒப்பந்தம் சொல்வதென்ன?**

கச்சத்தீவு தொடர்பான இரண்டாவது ஒப்பந்தம் 1976-ஆம் ஆண்டு மார்ச் 23-ஆம் தேதி கையெழுத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் மன்னார் வளைகுடா பகுதியிலும் வங்காள விரிகுடா பகுதியிலும் எல்லைகளை வரையறுத்தது. இந்த ஒப்பந்தம் கடல் எல்லைகளை வரையறுத்துக் குறிப்பிட்டதோடு, இரு நாடுகளும் தத்தம் கடற்பகுதியில் இறையாண்மை உடையவர்கள் என்று குறிப்பிட்டது.

யாத்ரீகர்களின் உரிமை குறித்தோ, மீனவர்களின் உரிமை குறித்தோ அதில் எதுவும் குறிப்பிடவில்லை. இதன் மூலம் 1974-இல் வழங்கப்பட்டிருந்த சலுகைகள், இந்த ஒப்பந்தத்தின் மூலம் இல்லாமல் ஆக்கப்பட்டன. இந்த ஒப்பந்தத்தில் இந்தியாவின் வெளியுறவுத் துறை செயலர் கேவல் சிங்கும் இலங்கையின் சார்பில் அந்நாட்டின் வெளியுறவு மற்றும் பாதுகாப்புச் செயலரான டபிள்யு.டி. ஜெயசிங்கேவும் கையெழுத்திட்டனர்.

**மீனவர்கள் எதிர்கொண்ட பிரச்னைகள் என்ன?**

இந்த இரு ஒப்பந்தங்களும் கையெழுத்தான பிறகு, நிலைமையில் பெரிய மாற்றம் ஏற்படவில்லை. இரு தரப்பு மீனவர்களும் எல்லாப் பகுதியிலும் மீன் பிடித்து வந்தனர்.

அதேபோல, கச்சத்தீவுக்குச் சென்ற யாத்ரீகர்களும் தடுக்கப்படவில்லை. ஆனால், இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போர் முடிவடைந்த பிறகு, இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைதுசெய்யப்படுவது, சுடப்படுவது, படகுகள் கைப்பற்றப்படுவது வழக்கமானது. இதையடுத்து இந்த விவகாரம் மிகப் பெரிய சர்ச்சையாக உருவெடுத்தது. ●

